# தீபகச் சுடர்

ஜூன் 2026

தீபம் 15 சுடர் 01

தீபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம், 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.



## தீபகத்திலிருந்து **இறையாசீர்**

அன்பான தீபகச் சுடர் வாசகர்களே,



# புதிய கல்வியாண்டும் புதிய கனவுகளும்!

இறைவன் அருளால் புதிய கல்வியாண்டை மகிழ்ச்சியுடனும் நம்பிக்கையுடனும் தொடங்கும் இந்த அருள்மிகு நேரத்தில், அனைத்து மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், கல்விப் பணியாளர்கள் மற்றும் நன்மனதுடைய உபகாரிகள், ஒத்துழைப்பாளர்கள் அனைவருக்கும் எங்கள் இதயம் கனிந்த வாழ்த்துகளையும் இறையாசிகளையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒவ்வொரு புதிய கல்வியாண்டும் புதிய கனவுகளையும், புதிய வாய்ப்புகளையும், புதிய சவால்களையும் நமக்கு முன்வைக்கிறது. அதேவேளை, மாணவர்களின் எதிர்காலத்தை வடிவமைக்கும் ஒரு அரிய சந்தர்ப்பத்தையும் அது நமக்குத் தருகிறது. இளம் தலைமுறையை அறிவிலும், ஒழுக்கத்திலும், நம்பிக்கையிலும் மற்றும் மனிதநேய மதிப்புகளிலும் வளர்ச்சியடையச் செய்வது கல்வியின் உயர்ந்த நோக்கமாகும்.

"தீபகம்" மறைப்பணி மற்றும் விழுமியக்கல்வி மையம், இக்கல்வியாண்டிலும் மாணவர்களை முழுமையான நபர்களாக உருவாக்கும் தனது அர்ப்பணிப்பான பணியை தொடரத் தயாராக உள்ளது. கல்வி என்பது வெறும் பாட அறிவை வழங்கும் செயலாக மட்டும் அல்ல, அது மனிதனின் உள்ளத்தையும், சிந்தனையையும், வாழ்க்கை நோக்கையும் மாற்றி அமைக்கும் புனிதப் பணியாகும். குறிப்பாக தொன் போஸ்கோவின் சலேசியர்கள் என்ற அடிப்படையில், இளைஞர்களை இறைநம்பிக்கையிலும், நற்செய்தி மதிப்புகளிலும், சமூகப் பொறுப்புணர்விலும் உருவாக்குவது நமது அடிப்படை நோக்கமாகவும் கடமையாகவும் உள்ளது.

இன்றைய உலகில் மாணவர்கள் கல்வி அழுத்தங்கள், தொழில்நுட்ப தாக்கங்கள், சமூக மாற்றங்கள், உறவுச் சிக்கல்கள் மற்றும் மதிப்பிழப்பு போன்ற பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். இத்தகைய சூழலில், அவர்களின் வாழ்வில் இறைநம்பிக்கை, அன்பு, மனித நேயம், ஒழுக்கம், சகிப்புத் தன்மை, பொறுப்புணர்வு மற்றும் சகோதரத்துவம் போன்ற உயரிய மதிப்புகளை விதைப்பது காலத்தின் அவசியமாகிறது. எனவே மாணவர்கள் நல்ல குடிமக்களாகவும், பொறுப்பான சமூகத் தலைவர்களாகவும், நம்பிக்கையுடன் வாழும் மனிதர்களாகவும் உருவாக வேண்டும் என்பதே எங்கள் ஆழ்ந்த விருப்பமாகும்.

இதனை முன்னிட்டு, "தீபகம்" இக்கல்வியாண்டிற்காக நவீன அறிவியல் முறையில் வடிவமைக்கப்பட்ட பல்வேறு திட்டங்கள், செயல்முறைப் பயிற்சிகள், மாணவர் மையப்படுத்தப்பட்ட நம்பிக்கை வளர்ப்பு நிகழ்ச்சிகள், விழுமியக்கல்வி அமர்வுகள் மற்றும் இளைஞர் மேம்பாட்டு முயற்சிகளைத் தயாரித்து வைத்துள்ளது. இந்நிகழ்ச்சிகள் மாணவர்களின் அறிவாற்றலை மட்டுமல்லாது, அவர்களின் உள்ளார்ந்த திறமைகள், நல்லுணர்வுகள் மற்றும் ஆன்மீக வளர்ச்சியையும் மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

அனுபவமிக்க, திறமையான மற்றும் அர்ப்பணிப்புடன் செயல்படும் ஆசிரியர்கள், பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஒத்துழைப்புடன், எங்கள் அனைத்து கல்வி நிறுவனங்களிலும் இந்த மறைப்பணியை சிறப்பாக முன்னெடுக்க உறுதிபூண்டுள்ளோம். மாணவர்களின் வாழ்க்கையில் ஒளி தரும் வழிகாட்டிகளாக இருந்து, அவர்களின் எதிர்காலப் பயணத்தில் நம்பிக்கையின் துணையாக இருப்பதே நமது பணியின் மையக் கருத்தாகும்.

இறைவனின் அருளிலும் திருவுளத்திலும் முழு நம்பிக்கை வைத்து, அனைத்து மக்களின் சகாய அன்னை அவர்களின் தாய்மையின் பாதுகாப்பும் வழிநடத்தலும் எப்போதும் நம்முடன் இருப்பதாக நம்புகிறோம். அவர்களின் பரிந்துரையால், நமது கல்விப் பணி மேலும் பல மாணவர்களின் வாழ்வில் ஒளியையும் நம்பிக்கையையும் விதைக்கட்டும். இந்த புதிய கல்வியாண்டு அனைத்து மாணவர்களுக்கும் அறிவிலும், நற்பண்புகளிலும், ஆன்மீக வாழ்விலும் மற்றும் சமூகப் பொறுப்புணர்விலும் சிறந்து வளர்ச்சியளிக்கும் அருள்மிகு ஆண்டாக அமைய இறைவனை வேண்டுகிறோம். ஒவ்வொரு மாணவரின் வாழ்க்கையும் நம்பிக்கையால் நிரம்பி, சாதனைகளால் சிறக்க, அவர்களின் எதிர்காலம் அர்த்தமுள்ளதாய் மற்றும் ஆசீர்வதிக்கப்பட்டதாய் அமைய எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

என்றும் அன்புடன்

*அருட்பணி.* **ஜேசுதாஸ்** *ச.ச*
*இயக்குநர் - தீபகம்*

## பகுதி 1 : வழிபாட்டு வழிகாட்டி


| | | |
|---|---|---|
| 06.06.2026 | புனித போனிப்பாஸ் - திருப்பலி | 06 |
| 07.06.2026 | கிறிஸ்துவின் தூய்மைமிகு திருவுடல் திருஇரத்தம் - திருப்பலி | 07 |
| 11.06.2026 | புனித பர்னபா-திருப்பலி | 08 |
| 12.06.2026 | இயேசுவின் தூய்மைமிகு இதயம் - திருப்பலி | 10 |
| 12.06.2026 | அருளாளர் பிரான்சிஸ் கெசி மற்றும் நண்பர்கள் - திருப்பலி | 11 |
| 13.06.2026 | புனித கன்னிமரியாவின் மாசற்ற இதயம் - திருப்பலி | 12 |
| 14.06.2026 | பொதுக்காலம் 11வது ஞாயிறு - திருப்பலி | 14 |
| 19.06.2026 | புனித ரோமுவர்டு - திருப்பலி | 15 |
| 21.06.2026 | பொதுக்காலம் 12ம் ஞாயிறு - திருப்பலி | 16 |
| 23.06.2026 | புனித ஜோசப் கபாசோ | 18 |
| 23.06.2026 | புனித திருமுழுக்கு யோவானின் பிறப்புப் பெருவிழத - திருப்பலி | 19 |
| 27.06.2026 | அலெக்சாந்திரியா நகர்ப் புனித சிரில் - திருப்பலி | 20 |
| 28.06.2026 | பொதுக்காலம் 13வது ஞாயிறு - திருப்பலி | 21 |
| 29.06.2026 | புனிதர்கள் பேதுரு, பவுல் திருத்தூதர்கள் பெருவிழா-திருப்பலி | 23 |
| 30.06.2026 | உரோமைத் திருஅவையின் முதல் மறைசாட்சியர்-திருப்பலி | 24 |


## பகுதி 2 : நம்பிக்கையில் வளர...


| | |
|---|---|
| தூய இதயமும் மாசற்ற இதயமும் பொழியும் அன்பு | 27 |
| இயேசுவின் தூய்மைமிகு இதயம் பற்றிய சிறப்பு நிகழ்வுகள் | 30 |
| அருளாளர் பிரான்சிஸ் கெசி மற்றும் குழுவின் தியாகம் | 34 |
| திருஅவைச் செய்திகள் | 37 |

## பகுதி-1

# வழிபாட்டு வழிக்காட்டி



# புனித போனிப்பாஸ்
## (ஆயர்-மறைசாட்சி)

திருப்பலி
05.06.2026

## முன்னுரை

*திரு. ஜான் அலெக்ஸ்*

அன்புக்குரியவர்களே, இன்று நாம் புனித போனிப்பாஸ் அவர்களின் திருவிழாவை நினைவு கூறும் இந்நேரத்தில் அவர் தனது 7 வயதில் துறவு மேற்கொண்டு 30வது வயதில் குருவாக அருட்பொழிவு பெற்று 716ல் மறைபரப்பு பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். 722ல் திருத்தந்தை 2ம் கிரகோரி அவர்களால் ஆயராக அருட்பொழிவு பெற்று ஜெர்மனி முழுதும் மறைப்பணி செய்யும் பொறுப்பையும் அனுமதியும் பெற்றார். பல ஆன்மாக்களை மீட்டுவந்த இப்புனிதர் 738ல் திருத்தந்தையின் ஆஸ்திரேலிய நாட்டு பிரதிநியானார். குறிப்பாக இவரது காலத்தில் 742 ஏப்ரல் 21ம் நாள் ஆயர் திருச்சங்கம் கூட்டப்பட்டு பல மாற்றங்களை திருஅவை அங்கீகரித்தது. அதில் ஒன்று ஆண்டிற்கு ஒருமுறை பெரிய வியாழன் அன்று குரு ஆயரின் கரங்களிலிருந்து புனித எண்ணெய் பெற்றுச் செல்வதாகும். 753ல் சுயீடர்சீ என்ற குலத்தில் கிழக்கு கடற்கரைப் பகுதியினைத் தம் மறைத்தளமாக நிர்ணயித்து போதித்தார். பலர் கிறிஸ்தவத்தை தழுவியதால் அங்கிருந்த உள்ளூர் மதவாதிகள் தங்கள் மதம் அழிந்துவிடுமோ என்று அஞ்சி 754 ஜுன் 5ம் நாள், திருமுழுக்கு மற்றும் உறுதி பூசுதல் வழங்க தயாராக இருந்த இப்புனிதரின் இல்லத்திற்கு சென்ற மதவாதிகள் அவரின் தலையை வெட்டினார்கள். அவரோடு 52 பேரை மறைசாட்சியாக்கினார்கள். இப்புனிதரை நினைவு கூறும் இந்நேரத்தில் அருட்பணியாளர்களுக்கு உதவிக்கரம் நீட்டும் குடும்பங்களில் இறையழைத்தல் எப்போதும் தழைத்தோங்கும் என்பதை மனதில்கொண்டு தொடர்ந்து இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. தூய்மையின் திருஉருவே இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் துறவிகளுக்காக மன்றாடுகிறோம். உள்ளமும் செயலும் நன்மையைக் கனியாக ஈந்தால்தான் முழுமையாக மனிதம் மலர்கிறது என்பதை அவர்களின் வாழ்வின்மூலம் நாங்கள் அறிந்து மனிதம் மலரும் இடத்தில் புனிதம் மணம்வீசும் என்பதற்கிணங்க எங்கள் வாழ்வை அமைத்துக்கொள்ள வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. நிறைவின் உருவமே எம் தந்தையே, இயேசு அன்று பாலைநிலத்தில் உம் வார்த்தைகளை கேட்டுக்கொண்டிருந்த மக்களுக்கு நீர் வேண்டிய மட்டும் உணவளித்தீரே எமது வாழ்விலும் எங்கள் துன்பவேளையில் நாம் வேண்டும் ஆசீர்வாதத்தையும் பலத்தையும் நிறைவாய் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. அமைதியின் அன்பரே எம் இறைவா, அமைதி தேடி ஏங்குகின்ற மக்களின் வாழ்வில் அடிமைத்தனங்கள் மறைந்து அமைதியும், சமத்துவமும், அன்பும், சுதந்திர அனுபவமும் எங்களிடையே திகழ்ந்திட அதற்காக நாங்கள் உழைத்திட அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.



# கிறிஸ்துவின் தூய்மைமிகு திருவுடல், திருஇரத்தம்

திருப்பலி
07.06.2026

## முன்னுரை

*திரு.T. சாம்சன்*

I. *இச. 8: 2-3, 14-16* II. *1கொரி. 10: 16-17* *யோவா. 6: 51-58*

இறையேசுவின் பிரியமான இறைச்சமூகமே, இன்று நாம் இயேசுவின் தூய்மைமிகு திருவுடல் திருஇரத்தப் பெருவிழாவைக் கொண்டாட அழைக்கப்பட்டிருக்கிறோம். நாம் இறைவனால் அழைக்கப்பட்ட, தேர்ந்தெடுக்கப்பட்ட பேறுபெற்றவர்கள். காரணம் இயேசு தம் உடலையே நமக்கு உணவாகத் தந்திருக்கிறார். நிலைவாழ்வு தரும் உணவை ஆவலுடனும், ஆர்வமுடனும் பெறவேண்டும். இந்தப் பெருவிழா நமக்கு கூறும் நற்செய்தி என்னவென்றால் எங்கே தியாகம் இருக்கிறதோ அங்கே வாழ்வு இருக்கிறது என்று கூறுகிறது. கிறிஸ்தவ நம்பிக்கையின் ஒரு முக்கிய நிகழ்வு என்பது நற்கருணை ஆகும். இயேசு தந்தையாம் கடவுளிடமிருந்து பெற்ற வாழ்வை நம்மோடு பகிர்ந்து கொள்ளும் கருவியாக நற்கருணை உள்ளது. இயேசு தரும் உணவானது முற்காலத்தில் சிறந்தது. அவ்வுணவை உண்டவர்கள் மீண்டும் இறந்தார்கள். ஆனால் இயேசுவின் உடலை உண்போர் எந்நாளும் உயிர்வாழ்வர்.

நற்கருணை கொண்டாட்டத்தின்போது நாம் கடவுளின் குடும்பமாக இணைகிறோம். கிறிஸ்துவின் உடலாகவும் மாறுகிறோம். ஆகவே நாம் உட்கொள்ளும் அப்பமும் இரசமும் இயேசுவோடு நம்மை இணைத்து கடவுளின் வாழ்வில் நாமும் வாழ்ந்து இணைந்து ஒன்றித்திருப்பதை உறுதிப்படுத்துகிறது.

வாழ்க்கையாக, வழக்கமாக இத்திருவுணவைப் பெறாமல் ஒவ்வொரு முறையம் புதிய ஆர்வத்துடனும் புதிய உற்சாகத்துடனம் விருந்தில் பங்கு பெறுவோம். நற்கருணை உண்டபின்பு எவ்வித பராக்குக்கும் இடம் கொடாமல் நம் உள்ளத்தில் வந்துள்ள இயேசுவுக்கு நன்றி கூறுவோம். நன்றியுள்ளத்தோடு இவரின் பாதையில் நம்மை பயணிக்க தயார்படுத்திக்கொண்டு வாழ முயல்வோம். ஒவ்வொரு திருப்பலியின் மையப்பகுதியில் இயேசுவின் உடலையும் இரத்தத்தையும் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கும்போது அன்னை மரியாளும், வானதூதர்களும், புனிதர்களும் இந்நிகழ்வில் பங்கு கொள்கிறார்கள். ஆகவே இயேசுவின் உடலையும் இரத்தத்தையும் உட்கொள்ளும் நாம் இறைவனுக்கு சாட்சியாக வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் நம்மையே ஒப்புக்கொடுத்து செபிப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்புத் தந்தையே இறைவா, திருஅவையை வழிநடத்த உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் மற்றும் திருநிலையினர் அனைவரும் நல்லாயனாம் இயேசுவைப் பின்பற்றி சமாதானத்தின் தூதுவர்களாகவும், அன்பின் முன்மாதிரியாகவும், நீதியின் கருவிகளாகவும் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. நானே உயிருள்ள உணவு என்று மொழிந்த இறைவா, திருவிருந்தின் வழியாக உமது உடலையும் இரத்தத்தையும் நற்கருணையின்மூலம் பெற்றுக்கொண்ட நாங்கள் எங்கள் அன்றாட வாழ்வில் பிறரின் பசியறிந்து அவர்களுக்கு உதவிடவும், பிறரின் இன்ப துன்பத்தில் பங்கெடுத்து அவர்களுக்கு அன்பையும் ஆதரவையும் வழங்கிடவும் தேவையான வரத்தை எங்களுக்கு தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. வழிகாட்டும் தெய்வமே இறைவா, நாட்டையாளும் தலைவர்கள் நாட்டிலுள்ள பிரச்சனைகளை தீர ஆராய்ந்து மக்களுக்கு சேவை செய்யும் நோக்கோடு நாட்டையாளும் தலைவர்கள் நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டுச்செல்ல எடுக்கும் எல்லா முயற்சிகளிலும் நீர் துணையிருந்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. மாறாத தெய்வமே எம் இறைவா, நாட்டின் எதிர்காலத் தூண்களாகிய மாணவ மாணவிகளை நீர் ஆசீர்வதித்து அவர்களின் கனவுகள் நனவாக எடுக்கும் எல்லா முயற்சிகளையும் நீர் கண்ணோக்கி அவர்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் சறுக்கல் ஏற்படாமல் பாதையை செம்மையாக்கி எல்லா காரியங்களையும் நேர்மையாக செய்யத் தேவையான வல்லமையைத் தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



# புனித பர்னபா
## (திருத்தூதர்-மறைசாட்சி)

திருப்பலி
11.06.2026

## முன்னுரை

*திருமதி. டிலைலா சேவியர்*

இறைவார்த்தையை அறிவி, வாய்ப்புக்கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் இதைச் செய்வதில் நீ கருத்தாய் இரு (2திமொ. 4:2) என்பதற்கிணங்க வாழ்ந்தவர் திருத்தூதர் பர்னபா. இவரின் விழாவை இன்று நாம் கொண்டாடுகிறோம். பர்னபா என்றால் "ஆறுதலின் மகன்", "உற்சாகத்தின் மகன்," "ஊக்குவிக்கும் பண்பாளன்" என்பது பொருள். இவர் சைப்பிரசு தீவைச்சார்ந்த லேவியர் ஆவார். திருத்தூதர்களால் பர்னபா என்று அழைக்கப்பட்ட இவரின் இயற்பெயர் யோசேப்பு (திப 4:36) ஆகும். பவுல் மனம்மாறிய பின் பர்னபாதான் அவரை எருசலேமில் திருத்தூதர்களிடம்

அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தினார் (திப. 9:27). பர்னபாவின் சீரிய பணியையும் அதில் அடைந்த வெற்றியையும் கண்ட பவுல் தன்னையும் அவருடன் இணைத்துக் கொண்டார்.

அந்தியோக்கிய திருஅவையில் பர்னபா நீகர் எனப்படும் சிமியோன், சீரேன் ஊரானாகிய லூக்கியு, குறுநில மன்னன் ஏரோதுவுடன் வளர்ந்த மனாயீன், சவுல் ஆகியோர் இறைவாக்கினராகவும் போதகராகவும் இருந்து, நோன்பு இருந்து ஆண்டவரிடம் மன்றாடிய போது "பர்னபாவையும் சவுலையும் ஒரு தனிப்பட்ட பணிக்காக நான் அழைத்திருக்கிறேன் அந்த பணிக்காக அவர்களை ஒதுக்கி வையுங்கள்" என்று தூய ஆவியார் அவர்களுக்கு கூறினார். எனவே அவர்கள் நோன்பிருந்து இறைவனிடம் வேண்டி தங்கள் கைகளை அவர்கள் இருவர்மீதும் வைத்து திருப்பணியில் அமர்த்தி அவர்களை அனுப்பி வைத்தார்கள் (திப 13:1-3).

பர்னபா மாற்குவைக் கூட்டிக்கொண்டு சைப்பிரசுக்குச் சென்றார். இன்றைய மத்தேயு நற்செய்தியில் 5:1-12ல் ஆண்டவர் "இயேசு" என்று அழியா எட்டு வாக்கியங்களை மலைப்பிரசங்கத்தில் மொழிந்தார். பின் அவர் "என் பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து, துன்புறுத்தி, உங்களைப்பற்றி இல்லாதவை பொல்லாதவையெல்லாம் சொல்லும்போது நீங்கள் பேறு பெற்றவர்களே, மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள், ஏனெனில் விண்ணுலகில் உங்களுக்குக் கிடைக்கும் கைமாறு மிகுதியாகும்." ஆண்டவரது கூற்றுக்கிணங்கவே சைப்பிரசு சென்று பர்னபா அங்கு நற்செய்தி அறிவித்து கல்லால் எறியப்பட்டு, தனது 64ம் ஆண்டு இறந்தார். பன்னிரு திருத்தூதர்களுள் ஒருவராக இல்லாதபோதும் பவுலைப்போலவே பர்னபாவும் திருத்தூதர் என்றே அறியப்படுகிறார். நாமும் பர்னபாவைப்போன்று தளராத உழைப்பும், குறையாத ஆர்வமும் உடைய பணியாளர்களாக நற்செய்திக்குச் சான்று பகர நல்ல மன உறுதியைத் தரும்படி இத்திருப்பலியில் இறைவனை மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. எல்லாம் வல்ல இறைவா, உம்மால் திருப்பொழிவு செய்யப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் அனைவரையும் உமது தூய ஆவியின் ஆற்றலால் வழிநடத்தி எந்தவொரு தீமையும், அவதூறும் அணுகாது காத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்புத் தந்தையே இறைவா, திருத்தூதர் பவுல் கூறியதுபோல் நாங்கள் துன்புறுகிறோம் என்றால் அது உங்கள் ஆறுதலுக்காகவும் மீட்புக்காகவும் தான் என்பதற்கிணங்க எங்கள் துன்ப துயரங்களைத் தளராமனதுடன் பொறுத்துக்கொண்டு மனஉறுதியுடன் மீட்பின் பாதையை அடைய எங்களுக்கு வரமருளுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

ஒற்றுமையிலும், அன்பு செலுத்துவதிலும், துன்பங்களைக் கண்டு சோர்ந்து போகாமலும் "பிறர் அன்பே தலையான பண்பு" என்ற கருத்தை மனதில் கொண்டு வாழ அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. வழிநடத்தும் தலைவரே எம் இறைவா, எம் தேசத்தை ஆட்சி செய்துவரும் தலைவர்கள், தேசமக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் சிறந்த திட்டங்களை உருவாக்கி மக்களுக்காக உழைக்க அவர்களுக்கு நல்ல மனதினைத் தந்தருளும்படி உம்மை மன்றாடுகிறோம்.

## இயேசுவின் தூய்மைமிகு இதயம்

திருப்பலி
12.06.2026

**முன்னுரை**

*திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்*

I. *இச. 7: 6-11* II. *1யோவா. 4: 7-16* *மத். 11: 25-30*

இறையேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, கல்லான இதயத்தை நீக்கி கனிவுள்ள இதயத்தை எம்முள் உருவாக்க, உம் திரு இரத்தத்தைச் சிந்தி இதயத்தின் கருணையை வெளிப்படுத்திய நம் இயேசு கிறிஸ்துவின் திரு இதயத்தின் பெருவிழா திருப்பலிக்கு உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். நாம் இறைவனின் அன்புப் பிள்ளைகள், அவர்மீது நாம் அன்புக்கொண்டு வாழ நம்மைத் தெரிந்துக்கொண்டார். நாம் அவரை அன்பு செய்வது என்பது அவரது கட்டளைகளைக் கடைப்பிடித்து வாழும் வாழ்க்கையாகும். அந்த கட்டளைகளையும், நியமங்களையும் நிறைவேற்ற ஆண்டவர் இந்த முதல் வாசகத்தின்மூலம் நம்மை அழைக்கின்றார்.

இரண்டாம் வாசகத்தில் நாம் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டு வாழும்போது கடவுளும் நம்மோடு இணைந்திருப்பார். கடவுளும் நம்மீது அன்பாய் இருப்பார். அவரது தூய இதயம் நம்மை அன்பு செய்யும் இதயம், அவரது அன்பில் நிலைத்து அவரது இதயத்திற்கேற்ற வாழ்க்கை வாழும்போது அவர் தமது தூய்மைமிகு இதயத்தில் வைத்து பாதுகாப்பார் என்று புனித யோவான் நூலிலிருந்து நாம் அறிகிறோம். நற்செய்தியில் இயேசுவின் போதனையை ஏற்க விரும்பாத யூத ஞானிகள், அறிஞர்கள் ஆகியோர் கடவுளால் புறக்கணிக்கப்பட்டு விட்டார்கள் எனவும், எளிய மனம் கொண்ட "குழந்தைகள்" போன்றவர்களை கடவுள் ஏற்றுக்கொண்டார் எனவும், இயேசுவின் சீடர்கள் எளியவர்கள், பாரம மக்கள் என்ற உண்மையை இயேசு பறைசாற்றுகிறார். இன்றும் கைவிடப்பட்ட மக்களை ஏழை, எளிய மக்களை தனது போதனைகளால் தெரிந்துக்கொண்டு இயேசு இவ்வுலகில் வழிநடத்தி தன் இதயத்தின் அன்பில் வைத்த பாதுகாக்கிறார். இயேசுவின் திரு இதயம் என்பது அன்பில் ஆலயமாகும். "பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லோரும் என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று இருகரம் நீட்டி அன்புத்தீயால் எரிந்துக்கொண்டிருக்கும் திரு இருதய ஆண்டவர் அழைக்கிறார். அவர் இதயத்தோடு இணைந்து பேரருளைப் பெற இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

3. படைப்பின் பரம்பொருளே இறைவா, உலக மக்கள் அனைவருக்கும் தேவையான போதனைகளைத் தான் இயேசு மலைப்பொழிவில் சொன்னார். எனவே கிறிஸ்தவர்களாகிய நாம் இவற்றை கட்டாயம் பின்பற்றி வாழ்ந்து கிறிஸ்துவை பறைசாற்றிடும் சீடராக வாழ எம்மை வழிநடத்தும்படி உம்மை மன்றாடுகிறோம்.



## அருளாளர் பிரான்சிஸ் கெசியா நண்பர்கள் (மறைசாட்சியர்)

திருப்பலி 12.06.2026

### முன்னுரை

*திருமதி. ராணிசம்பந்தன்*

நமது திருஅவை இன்றைய நாளில் அருளாளர் பிரான்சிஸ் கெசியாவையும் அவரது தோழர்கள், எட்வர்டு, கலிரினிக், ஜாரோக்னியு, சீஜெஸ்லா, ஜோவேய்க், எட்வர்டு கஸ்மியர்ஸ் ஆகியோரையும் சிறப்பிக்க அழைக்கின்றது. அருளாளர் பிரான்சிஸ் கெசி 1920ம் ஆண்டு பெர்லின் நகரில் பிறந்து தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்த வேளையில் இளையோர் அணி ஒன்றில் இணைந்து மகிழ்வுடன் சேவை புரிந்து வந்தார். தினமும் செபமாலை செபிப்பது, நற்கருணை உட்கொள்வது ஆகிய கோட்பாடுகளில் உறுதியாக இருந்தார். 1939ல் இரண்டாம் உலகப்போர் மூண்டபொழுது சலேசிய இளையோர் மையம், ஜெர்மானிய வீரர்களால் கைப்பற்றப்பட்டு, 1940ல் அருளாளர் பிரான்சிஸ் கெசியும் அவரது தோழர்களும் சிறைப்பிடிக்கப்பட்டனர். சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் அங்கும் தங்களது செபங்களையும், வழிபாட்டுக் கொண்டாட்டங்களையும் விடாது கடைப்பிடித்தனர். முதிர்வடைந்த சிறைவாசிகளிடம் அன்பு கொண்டு அவர்களுக்குச் சேவை செய்தனர்.

1942 ஆகஸ்டு 24அன்று இட்லரின் ஆட்சியில் தேசதுரோகிகளாக குற்றம் சாட்டப்பட்டு வேதசாட்சிகளாக உயிர் துறந்தனர். அவர்கள் இறந்தபோது அவர்களின் வயது 23க்குள் இருக்கும். 1999ல் திருத்தந்தை இரண்டாம் ஜான்பால் அவர்களுக்கு அருளாளர் பட்டம் வழங்கினார். இளம் வயதுமுதல் இறைவனிடம் இவர்கள் கொண்ட இறைபக்தியையும், இறைவனுக்காக இன்னுயிர் துறந்த இவர்களின் மனஉறுதியையும் மனதிலிருத்தி இத்திருப்பலியில் இணைவோம், இறைப்பக்திப் பெறுவோம்.

### நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. திருஅவையின் நாயகனே இறைவா, திருஅவையை வளமுடன் வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் ஆகிய அனைவரும் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி ஏழை எளியோருக்கு நல் உள்ளத்துடன் பணிபுரியும் தாராள மனதைத் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பே உருவான இறைவா, அருளாளர் பிரான்சிஸ் கெசி மற்றும் அவரது நான்கு தோழர்களைப் போன்று, நாங்களும் சேவை மனப்பான்மையிலும்,

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

அளவற்ற செல்வமாகிய இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்க அழைப்பவரே எம் இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், இறைநம்பிக்கையாளர்கள் அழைப்பின் குரலுக்கு மகிமைச் சேர்க்கும் விதமாக நற்செய்திப்பணி செய்திட வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. மாசில்லா இரத்தத்தால் உலகை மீட்டெடுத்தவரே, எம் நாட்டையாளும் தலைவர்கள், அதிகாரிகள் தன்னலம் பாராமல் சேவை மனப்பான்மையோடு ஆட்சி செய்யவும், நாட்டின் வளர்ச்சியை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு செயலாற்ற வேண்டிய வரமருள ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

4. குணமாக்கும் வள்ளலே எம் இறைவா, நோயினால் பாதிக்கப்பட்டு உடல்நலம் குன்றியிருப்பவர்களுக்கு நற்சுகம் அளித்து, அவர்கள் இயல்பு வாழ்க்கை வாழவும், தாங்கள் செய்கின்ற தொழில்களில் முன்னேற்றம் ஏற்பட்டு, பொருளாதாரம் மேம்பட வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

5. இரக்கமும் அருளும் கொண்ட ஆண்டவரே, எங்கள் குடும்பங்களில் அன்பு, ஒற்றுமை, மன்னிப்பு ஆகியவை வளர்ந்து கிறிஸ்துவின் இதயத்தைப்போல இரக்கமுள்ள குடும்பங்களாக மாற அருள்வேண்டி ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

# புனித கன்னிமரியாவின் மாசற்ற இதயம் நினைவு

திருப்பலி
13.06.2026

## முன்னுரை

*திரு. ஜீசஸ் மகுட மன்னன்*

இது போராட்டத்தின் நேரமல்ல, மன்றாட்டின் நேரம். "மரியன்னையின் மாசற்ற இதய பக்தியை என் இதய பக்திக்கு இணையாக வைக்க நான் விரும்புகிறேன்" என்று பாத்திமா செய்தியில் இயேசு ஆண்டவரே வெளிப்படையாகக் கேட்டிருக்கிறார். இயேசு பாலனும் மாதாவும் லூசியாவிடம், "மரியாயின் மாசற்ற இதயம் நன்றியற்ற மனிதரின் முட்களால் ஒவ்வொரு கணமும் குத்தப்பட்டு நிறைந்து போயிருக்கிறது. பரிகார முயற்சி செய்து அதை எடுப்பாரில்லை, நீயாவது எனக்கு ஆறுதல் அளிக்க முயற்சி எடு" என்று பரிதாபமாய்க் கேட்டார்கள். அந்த முட்களை ஒவ்வொன்றாக அகற்றி அக்காயத்தை நம் அன்பினால் ஆற்ற வேண்டும், நம் ஒவ்வொரு நினைவும், சொல்லும், செயலும் அதற்கு ஏற்றதாய் அமைய வேண்டும்.

பாத்திமாவில் மரியன்னை காட்சியளித்தபோது "நான் மட்டுமே உங்களுக்கு உதவ முடியும். செபியுங்கள், பரித்தியாகங்களை

ஒப்புக்கொடுங்கள். முதல் சனிக்கிழமை பக்தியை அனுசரியுங்கள்” என வாக்களிக்கிறார். மாதாவின் இதயம் “துயரம் நிறைந்த மரியாயின் மாசற்ற இதயம்” ஆகும். “மாசற்ற” என்ற அடைமொழி இறைவனால் மாதாவுக்கு அளிக்கப்பட்டது. “துயரம் நிறைந்த” என்ற அடைமொழி நம்மீதுள்ள அன்பினால் அன்னையே ஏற்றுக்கொண்டது.

மூவொரு இறைவன் மரியன்னையும், மரியாள் இறைவனையும் நேசிப்பதில் எந்தக் குறையும் இல்லாமல் அவர்கள் மோட்ச பாக்கியத்தை அனுபவிக்கிறார்கள். ஆனால் நாம் அவர்களை நேசிப்பதில் மோட்ச ஆனந்தம் இன்னும் முழுமைப்பெறவில்லை. நம்முடைய பாவங்களால் அது முழுமைப்பெறவில்லை. ஏனென்றால் அவை கடவுளை நோகச் செய்கின்றன. நம்மையும் பாவத்திற்குள்ளாக்குகின்றன. மாசற்ற அன்னையின் உள்ளத்தை அன்பு செய்வோம் என்றும் அதில் காணப்படும் அன்பிற்கேற்ற வாழ்வு வாழ்வோம் என்றும் வாக்களித்து இன்றைய திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்பின் அருட்சுடரே எம் இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரையும் உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்கள் மேற்கொள்ளும் பணிகள் அனைத்தும் உமது சித்தப்படி வழிநடத்த தேவையான அருள்வரங்களை பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. இரக்கமிகு இறைவா, இயேசுவின் தாயான மரியாவை பிரிவினைக் கிறிஸ்துவர்களும் வணக்கம் செலுத்தும் முறையை எதிர்க்கிறார்கள். மற்ற சபைகளுக்கு மாறிக் கொண்டிருக்கிற கோடிக்கணக்கான கத்தோலிக்க மக்களும் அன்னைக்கு விரோதமானவர்களாகச் சேர்ந்து இறைவனுக்கு எதிராகப் பேசி வருகின்றனர். உமது அளவில்லா இரக்கப் பெருக்கத்தால், உம்மக்களின் எண்ணங்களை மாற்றி உம்மைப் பின்தொடர்ந்து வழிநடக்கத் தேவையான வரமருள மரியாயின் மாசற்ற இதயத்தின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பின் விண்ணகத் தந்தையே எம் இறைவா, உலகெங்குமுள்ள திவ்விய நற்கருணைப் பேழைகளில் இருக்கும் இயேசு கிறிஸ்துவின் விலைமதிக்கப்படாத திரு உடலையும், திரு இரத்தத்தையும், ஆத்துமத்தையும், தெய்வீகத்தையும் அவருக்குச் செய்யப்படும் நிந்தை, துரோகம், அலட்சியத்திற்குப் பரிகாரமாக உமக்கு ஒப்புக்கொடுத்து உமது திரு இதயத்தினுடையவும், அளவற்ற பேறுபலன்களைப் பார்த்து நிர்பாக்கிய பாவிகள் மனந்திரும்பத் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



# பொதுக்காலம் 11வது ஞாயிறு

திருப்பலி
14.06.2026

## முன்னுரை

*திருமதி. ராணிசம்பந்தன்*

I. *விப. 19: 2-6* II. *உரோ. 5: 6-11* *மத். 9: 36-10: 8*

இறையேசுவில் இனிய இறைக்குலமே, இன்றைய தினம் நாம் பொதுக்காலம் 11ம் ஞாயிறைச் சிறப்பித்துக் கொண்டிருக்கிறோம். இன்றைய முதல் வாசகமான விடுதலைப் பயண நூலில் இஸ்ரயேலர் எகிப்தியரிடமிருந்து தப்பி பாலை நிலத்தில் தஞ்சம் அடைந்ததையும் ஆண்டவர் மோசே இஸ்ரயேலை அழைத்து கழுகுகளின் இறக்கையின்மேல் இஸ்ரயேலை அழைத்து வந்ததையும் அவர்கள் உலகமே அவர் உடைமையெனினும் இஸ்ரயேல் மக்கள் அவரின் தனிச்சொத்தாகவும் குருத்துவ அரசராகவும் தூய மக்களினமாகவும் இருப்பார்கள் என்று கூறப்படுகிறது. இரண்டாம் வாசகமான புனித பவுல் உரோமையரிலும் ஒரு நேர்மையாளரை காக்க ஒருவர் உயிர் துறக்கலாம். ஆனால் இறைப்பற்று இல்லாமல் இருந்து நமக்காக கடவுள் நம்மீது கொண்டிருந்த அன்பின் வெளிப்பாடாக தன் மகன் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் அவரின் இறப்பினால் நம்மை கடவுளுக்கு ஏற்புடையவர்களாக்கி, கடவுளோடு நம்மை ஒப்புரவாக்கியுள்ள நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய் நாம் கடவுளோடு உறவு கொண்டிருப்பது மிகவும் மகிழ்ச்சியை தருகிறது என்றும் கூறுகிறார்.

நற்செய்தியாளர் மத்தேயு, ஆயனில்லா ஆடுகளைப்போல திரண்டிருந்த மக்கள் கூட்டத்தின்மீது பரிவுக்கொண்ட இயேசு, தனது பன்னிரண்டு சீடர்களையும் அழைத்து, "அறுவடையோ மிகுதி வேளையாட்களோ குறைவு" ஆகவே வழிதவறிய ஆடுகளைப்போல் இருக்கும் இஸ்ரயேல் மக்களிடம் சென்று, விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது என்று பறைசாற்றி, நோய்களை குணமாக்குங்கள், இறந்தோரை உயிர்பெறச் செய்யுங்கள், பேய்களை ஓட்டுங்கள். கொடையாக பெற்றீர்கள், கொடையாகவே வழங்குங்கள் என்று கூறிய இயேசு கிறிஸ்துவின் சீடத்துவத்தில் இணைந்து தியாக வாழ்வு வாழ்வோம் என்ற சிந்தனையோடு இத்திருப்பலியில் இணைவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நல்லாயனே எம் இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், அருட்பணியாளர்கள், துறவற கன்னியர் மற்றும் திருநிலையினர் அனைவரும் அன்பு, இரக்கம், பரிவு, ஒழுக்கம், இறைபயம் என்னும் சுவையுள்ள உணவுகளை அவர்தம் ஆடுகளுக்கு வழங்க அருள்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அறுவடையோ மிகுதி, வேலையாட்களோ குறைவு என்றுரைத்த எம் இறைவா, இறைவார்த்தையை எடுத்து வைக்கவும் அதை வாழ்வாக்கவும்

ஆர்வமுடன் உழைக்கும் நல்ல உள்ளங்களை திருஅவைக்கு தந்து குருக்களையும், துறவிகளையும் உம் பணிக்காக உழைக்க உருவாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. கொடையாக பெற்றுக்கொண்டதை கொடையாக வழங்குங்கள் என்றுரைத்த எம் இறைவா, பட்டம் பதவி மற்றும் பொன் பொருள் என்னும் உம் கொடைகளை நிறைவாக பெற்றுக்கொண்ட உம்மையே என்றும் பின்பற்றி வாழவும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. பாதுகாக்கும் இறைவா, இவ்வுலகில் குடும்பங்களில் கணவன், மனைவி இடையே ஆணவம், கருத்து வேறுபாடு ஏற்பட்டு விவாகரத்து போன்ற பிரிவுகள் தொடர்ந்து ஏற்பட்டு கொண்டே உள்ளது. இச்சூழ்நிலை மாறி ஒற்றுமையும், அன்பும், அமைதியும் நிலவி பிரிவுகள் ஏற்படாமல் காக்க அருள்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



## புனித ரோமுவால்டு
## (துறவு மடத்து தலைவர்)

திருப்பலி
19.06.2026

### முன்னுரை

*திரு. விக்டர்*

இறையேசுவில் இனிய மக்களே, இன்று நாம் புனித ரோமுவோல்ட், என்னும் துறவு மட தலைவரை சிறப்பிக்க ஒன்று கூடியுள்ளோம். புனிதர் இத்தாலியில் "ரவென்னா" என்னும் இடத்தில் பிறந்ததால் புனித ரோமுவால்ட் ஆப் ரவென்னா என்று அழைக்கப்படுகிறார். செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தவர் தந்தை செர்ஜியஸ் டெக்லி ஒனெஸ்டி தாய் "டிராவர்சரா டிராவர்சர்" சிறிய வயதில் உலகின் பொதுவான பாவங்களிலும், இன்பங்களிலும் ஈடுபட்டவர். தந்தையின் சொத்து சண்டையினால் மனம் கசிந்து "சான்ட் அப்போலினாரின்" பசிலிக்காவிற்குச் சென்று 40 நாட்கள் தவம் புரிந்தார். பின் சில தீர்மானங்களுக்கு பிறகு ரோமுவால்ட் அங்கே துறவியானார். அச்சபையின் மாற்றங்களினால் அதிருப்தியடைந்தராய் "மரினஸ்" என்ற துறவியின் வழிகாட்டுதலின்கீழ் வெனிஸ்க்கு சென்று அங்கு வாழ்ந்தார். மரினஸ் மடாலயத்திற்கு அருகில் ஒரு துறவறத்தை அமைத்தார். ரோமுவார்ட் அங்கு 10 ஆண்டுகள் வாழ்ந்தார். பின் 30 ஆண்டுகள் இத்தாலியில் சுற்றிச்சென்று மடங்கள், மற்றும் துறவிகளை நிறுவி சீர்த்திருத்தினார்.1012ல் அரெஸ்ஸோ மறை மாவட்டத்திற்கு வந்து தானமாக கிடைத்த நிலத்தில் "கேமல்டோலிஸ்" என்னும் ஒழுங்கின் மடம் கட்டப்பட்டு செயின்ட் பெனடிக்ட் ஒழுங்கின் துறவற சபையாக நடத்தப்பட்டு வருகிறது. ரோமுவால்ட் வால்டி காஸ்ட்ரோவன் மடாலயம் உட்பட பல மடங்களை நிறுவினார். "கேமல்டோலிஸ்" வரிசையின் நிறுவனர் மற்றும் பதினோராம் நூற்றாண்டின் எரிமிட்டடிகல் துறவறத்தின் மறுமலர்ச்சி முக்கிய நபராக இருந்தார். பின் நோய்வாய்ப்பட்டு இறைவனடி சேர்ந்தார். தூய்மை, ஒழுக்கம், இறைநம்பிக்கை, விடாமுயற்சிக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய நம் புனிதரின் பண்புகளை வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுகிறோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நம்பிக்கையின் நாயகனே இறைவா, எம் திருத்தந்தை பிரான்சிஸ் அசிசி, தனது எளிய வாழ்வாலும் தனது அர்த்தம் செறிந்த பயணங்களாலும் இயேசுவின் இறையாட்சி உலகெங்கும் பரப்ப நல்ல உடல் நலமும் நீண்ட ஆயுளையும் வழங்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அனைத்துலக அரசரே இறைவா, இறைநம்பிக்கை, இறைபக்தி, இறைப்பற்று இதில் எதிலுமே ஆர்வம் இல்லாதவர்களாக மனம்போன போக்கில் தன்னை இணைத்துக்கொண்டு அதையே வாழ்வாக, அமைத்து கொண்டிருக்கும் இக்கால தலைமுறையினருக்கு நம்பிக்கையின் ஆழத்தை புரியவைத்து வழிநடத்த வேண்டுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. குணமளித்து வாழ்வளிப்பவரே, கருணை இல்லங்களில் மனம் வருந்தி, கவலையுடன் இருக்கும் முதியோர்களையும், யாருமற்ற அனாதையான நிலையில் உள்ளவர்களையும் உம் கருணையினால் குணமளித்து ஆதரவளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



# பொதுக்காலம் 12வது ஞாயிறு

திருப்பலி
21.06.2026

## முன்னுரை

*திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்*

I. *எரே. 20: 10-13* II. *உரோ. 5: 12-13* *மத். 10: 26-33*

அன்பிற்குரிய சகோதர சகோதரிகளே, இன்றைய பொதுக்காலம் பன்னிரெண்டாம் ஞாயிறு திருப்பலியை இறைவனுக்கு ஒப்புக்கொடுக்க மகிழ்வோடு ஒன்று கூடியிருக்கிறோம். இறைவாக்கினர் எரேமியா தன்னை எதிர்த்தவர்களின் நடுவிலும் ஆண்டவர்மீது நம்பிக்கை வைத்து உறுதியாக நிற்பதைக் காண்கிறோம். ஆண்டவர் தம்முடன் இருப்பதால் அவர் அஞ்சவில்லை, ஆண்டவர் வலிமை வாய்ந்த வீரரைப்போல் எரேமியாவுடன் இருப்பதை உணர்ந்து ஆண்டவருக்கு புகழ்பாக்கள் பாடுகிறார். நாமும் ஆண்டவரை இந்த முதல் வாசகத்தின் வழியாக புகழ்வோம். ஆதாமின் கீழ்ப்படியாமையால் பாவம் உலகத்தில் நுழைந்தது. ஒரு மனிதனால் இந்த

உலகத்தில் நுழைந்த பாவத்தை இயேசு கிறிஸ்து மறுவுறு ஏற்று பாவத்தை விலக்கி, எல்லா மக்களையும் இறைவனுக்கு ஏற்புடையவராக்கினார். நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் சாட்சிகளாக விளங்கும்போது நாம் இந்த உலகத்திற்கு மீட்பை அறிவிக்கிறோம். இந்த அறிவிப்பை பவுலடிகளாருடன் இணைந்து சாட்சிய வாழ்வு வாழ்வோம் என்று அறிக்கையிடுவோம்.

நற்செய்தியில் பல்வேறு துன்ப துயரங்களை இயேசு அனுபவித்தாலும் அவற்றைக்கண்டு அஞ்சாது, இறைவனின் துணையை முழுமையாக

உணர்ந்தார். மன உறுதியுடன் அச்சமில்லா மனநிலையுடன் துன்பங்களை எதிர்க்கொண்டார். "அஞ்சாதீர்கள்" என்று இயேசு தம் சீடர்களுக்கு ஆறுதல் அளிக்கிறார். வாழ்வில் வரும் துன்பங்களைக் கண்டு பயப்படாது, பாவத்திற்கு மட்டுமே பயந்து வாழக்கூடிய வாழ்வையும் மனப்பக்குவத்தையும் நாம் ஒவ்வொருவரும் பெற்றிருத்தல் மிக அவசியம்.

துன்பம் ஒரு வழியில் நம்மை தாக்கலாம். ஆனால் "அஞ்சாதே" என்ற இறைவனின் வார்த்தைப் பல வழிகளில் நம்மைக் காப்பாற்றும். நமது கவலைகளை, சிலுவைகளை இறைவனிடம் ஒப்படைப்போம். இறைவன் நம் துன்ப துயர வேளையில் நம்மோடிருந்து வலிமை வாய்ந்த வீரராக நம்மைக் காக்க இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அஞ்சாதிருங்கள் என்று கூறிய இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் திருஅவை பணியாளர்கள் அனைவரும் அச்சமின்றி நற்செய்தியை அறிவிக்க வேண்டிய இறையருளைப் பெற வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

2. உலகையாளும் உன்னதரே எம் இறைவா, நாட்டுத்தலைவர்கள் அனைவரும் நீதியுடனும், நேர்மையுடனும் சமாதானத்துடனும் மக்களை வழிநடத்த வேண்டிய நல்ல ஞானத்தையும், சீரிய சிந்தனையையும் அவர்களுக்கு அளித்து நாட்டில் எவ்விதமான அசம்பாவிதங்களும் நிகழாதபடிக்கு நாட்டைப் பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. உம்மீது அச்சம் கொண்டு வாழ்வோரை அரவணைத்து வழிநடத்துபவரே, பயம், துன்பம், நோய், தனிமையில் வாழ்வோர், மற்றும் பலவிதமான வெளியே சொல்லமுடியாத அளவுக்கு பிரச்சனைகளை சந்திப்பவர்களை உமது பதம் ஒப்புக்கொடுக்கிறோம். இவர்களின் பலவீனங்களைப் பாராமல் உம்மால் உருவாக்கப்பட்டு, வழிநடத்தப்பட்டு வந்தவர்களை நீர் ஒருபோதும் கைவிடமாட்டேன் என்றவரே இவர்களுக்கு உமது ஞானத்தை பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. நம்பிக்கைக்குரிய செயல்களால் பூவுலகை நிரப்புகிறவரே, எங்கள் குடும்பங்களில் இறைநம்பிக்கை வளர்ந்து எத்தகைய சோதனைகளையும் இறைவனின் அருளால் வென்றிடுவோம் என்ற நம்பிக்கையோடு, இறைவன்மேல் அன்புக்கொண்டவர்கள் எதற்கும் அஞ்சாமல் தைரியத்தோடும், நேர்மையோடும் செயல்பட்டு கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.



# புனித ஜோசப் கஃபாசோ

திருப்பலி
23.06.2026

## முன்னுரை

*திரு.T. சாம்சன்*

இறைச்சமூகத்தின் திருக்கூட்டமே, இன்று புனித ஜோசப் கஃபாசோ (1811-1860) ஒரு இத்தாலிய அருட்தந்தை. இவர் புகழ்பெற்ற ஆன்மீக வழிகாட்டி மற்றும் புனித யோவான் போஸ்கோவின் முக்கிய குருவாகவும் திகழ்ந்தார். இதனால் அவர் சலேசியன் குடும்பத்தின் வரலாற்றில் ஒரு முக்கிய நபராக விளங்குகிறார். இவர் 1811ம் ஆண்டு ஜனவரி 15ம் தேதி இத்தாலியின் காஸ்டெல்னுவோ டி அஸ்டியில் பிறந்தார். அவர் புனித யோவான் போஸ்கோவின் ஆன்மீக இயக்குநராக இருந்து, இளைஞர்களுடன் பணியாற்றுவதற்காக சலேசியன் சபையை நிறுவ அவருக்கு வழிகாட்டினார். அவர் அறநெறி இறையியலைப் போதித்தார், மேலும் புகழ்பெற்ற பாவமன்னிப்பு வழங்குபவராகவும் சிறை நிலைமைகளைச் சீர்திருத்துபவராகவும் விளங்கினார்.

சலேசிய சபையின் நிறுவனர் அல்ல என்றாலும், ஜோசப் கஃபாசோ சலேசிய ஆன்மீகத்தின் ஒரு மையத் தூணாகக் கருதப்படுகிறார். இவர் டான் போஸ்கோவின் ஆரம்பகால மறைப்பரப்புப் பணியில் அவருக்கு ஆதரவளித்ததோடு, தூரினின் ஏழை இளைஞர்கள்மீது கவனம் செலுத்துமாறு அவரை ஊக்குவித்தார். புனித ஜோசப் கஃபாசோ தனது பணிவு, ஆழ்ந்த செப வாழ்க்கை மற்றும் மிகவும் கைவிடப்பட்டவர்களுக்கு, குறிப்பாக கைதிகளுக்குச் சேவை செய்வதில் கொண்ட அர்ப்பணிப்பு ஆகியவற்றிற்காக அறியப்பட்டார். "தூக்குமேடையின் பாதிரியார்" என்று அறியப்படும் இவர், கைதிகள் மற்றும் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களின் பாதுகாவலராவார். 1860ம் ஆண்டு ஜூன் 23ம் தேதி தூரினில் காலமானார். இவரின் திருவிழா நாள் ஜூன் மாதம் 23ந்தேதி கொண்டாடப்பட்டு வருகிறது. 1925-ல் அருளாளர் பட்டம் பெற்ற இவர், 1947-ல் திருத்தந்தை பன்னிரண்டாம் பயஸால் புனிதராக அறிவிக்கப்பட்டார். இப்புனிதரின் வாழ்வைப் பின்பற்றி நாமும் வாழ இத்திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. திருஅவையின் தலைவரே எம் இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் மற்றும் திருநிலையினர் அனைவரையும் உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்கள் செய்கின்ற ஒவ்வொரு நற்செய்தி அறிவிப்பும் பணியையும், செயல்களையும் உமது சித்தப்படி செய்து முடிக்க உமது தூய ஆவியாரின் அருட்கொடைகளை நிறைவாகப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. மன்னிக்கும் மாபரனே எம் இறைவா, நீர் படைத்தவற்றையெல்லாம் இப்பொழுது அழித்துக்கொண்டு வரும் விஞ்ஞான அறிவினால் பலவிதமான சீரழிவுகளைச் சந்திக்கும் நாங்கள் மீண்டும் இயற்கையின் படைப்பின் மகத்துவத்தை உணர்ந்தவர்களாக நாங்கள் வாழவும், அவற்றினை முழுமையாக அனுபவத்து நாங்கள் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள் என்றவரே, எங்கள் குழந்தைகளையும், இளைஞர்களையும் உமக்கு ஒப்புக்கொடுக்கின்றோம். இன்றைய தலைமுறையினர் அனைவரும் தங்களின் வாழ்வை மனம்போன போக்கில் வாழாமல் உமக்கேற்ற பிள்ளைகளாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## புனித திருமுழுக்கு யோவானின் பிறப்பு பெருவிழா

திருப்பலி
23.06.2026

### முன்னுரை

*திரு. ஜான் அலெக்ஸ்*

அன்பான சகோதர சகோதரிகளே, இன்று நாம் திருமுழுக்கு யோவானின் பிறப்புப் பெருவிழாவை மகிழ்ச்சியுடன் கொண்டாடுகிறோம். திருஅவையில் போற்றப்படும் மிகச் சில புனிதர்களின் பிறந்த நாட்களில் இதுவும் ஒன்றாகும் கிறிஸ்துவின் வருகைக்காக வழியை ஆயத்தப்படுத்திய முன்னோடியாக அவரது பங்களிப்பை இது அடையாளப்படுத்துகிறது. தம் தாயின் கருவிலேயே புனிதப்படுத்தப்பட்டு, தூய ஆவியால் நிரப்பப்பட்ட இப்புனிதர், மீட்பரின் வருகையை அறிவிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். புனிதரின் பெருவிழாவிற்காக நாம் கூடிவரும் இவ்வேளையில், உண்மையான மனந்திரும்புதல், எளிமை, மற்றும் உறுதியான விசுவாசம் நிறைந்த வாழ்வை வாழ்வதற்கும், மற்றவர்களை எப்போதும் இறை ஆட்டுக்குட்டியான கிறிஸ்துவிடம் வழிநடத்துவதற்கும் தேவையான அருளுக்காக இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

### நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. திருச்சபைக்காக: நம் திருத்தந்தை, ஆயர்கள் மற்றும் குருக்கள், திருமுழுக்கு யோவானின் வைராக்கியத்தால் உத்வேகம் பெற்று, அச்சமின்றி உண்மையைப் போதித்து, எல்லா மக்களையும் கிறிஸ்துவிடம் வழிநடத்த வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. உலகத் தலைவர்களுக்காக: அதிகாரத்தில் இருப்பவர்கள் நீதியையும், அமைதியையும், ஒவ்வொரு மனித உயிரின் மாண்பையும் நிலைநாட்டுவதற்கான ஞானத்தையும் தைரியத்தையும் பெற வேண்டி, இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. குடும்பங்களுக்கும் பெற்றோர்களுக்கும்: சகரியா மற்றும் எலிசபெத்தின் முன்மாதிரியைப் பின்பற்றி, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை விசுவாசம், அன்பு மற்றும் இறை சித்தத்திற்குக் கீழ்ப்படிதலுடன் வளர்க்க வேண்டும் என்று ஆண்டவரிடம் வேண்டுகிறோம்.

4. பிறக்காத குழந்தைகளுக்காக: திருமுழுக்கு யோவானின் அற்புதப் பிறப்பின் வழியாக, பிறக்காத அனைத்துக் குழந்தைகளும் பாதுகாக்கப்படவும், குடும்பங்கள் புதிய வாழ்வின் வரத்தால் ஆசீர்வதிக்கப்படவும் இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

5. சமூகத்திற்காக: திருமுழுக்கு யோவானைப் போல, நம் வாழ்வில் கிறிஸ்து பெருகும்படி நாம் குறைந்து, உலகப்பிரகாரமான கவனச் சிதறல்களிலிருந்து நம்மை விடுவித்து, ஆன்மீக வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



## அலெக்சாந்திரியா நகர்ப் புனித சிரில்

திருப்பலி
27.06.2026

### முன்னுரை

*திருமதி. டிலைலா சேவியர்*

இன்று திரு அவையானது அலெக்சாந்திரியா நகர் புனித சிரில் திருவிழாவைக் கொண்டாடி மகிழ்கிறது. எகிப்து நாட்டில் அலெக்சாந்திரியா நகரில் 376ஆம் ஆண்டு பிறந்தவர் புனித சிரில். கி.பி. 412ல் இவர் அலெக்சாந்திரியா நகரில் ஆயரானார். "இயேசு படைக்கப்பட்ட பொருள் மட்டுமே மனித இயல்புடையவரே-அவரிடம் இறை இயல்பு என்பது இல்லை. மரியா இயேசுவின் தாய் மட்டுமே. இறைவனின் தாய் அல்ல" என்று நெஸ்தோரியுஸ் என்ற ஆயர் ஒரு தப்பறைக் கொள்கையைப் பரப்பினார்.

இந்த தப்பறையான போதனையைக் கண்டிக்க எபேசு நகரில் கி.பி. 431 ஜூன் 22ல் திருச்சங்கம் கூடி நெஸ்தோரியுசுக்குக் கடுமையான கண்டனம் தெரிவித்தது. இந்த சங்கத்தில் நம் புனிதர் கலந்துக்கொண்டு "மரியா இறைவனின் தாய்" என்று விவாதித்தார். திருஅவையும் "மரியா இறைவனின் தாய்" என்பதை தமது கோட்பாடாக வெளியிட்டது. கொதிப்படைந்த நெஸ்தோரியுசின் ஆதரவாளர்கள் சிரில்மீது குற்றம் சுமத்தி திரு அவையில் இருந்து வெளியேற்ற முடிவெடுத்தார்கள்.

பேரரசர் 2ம் தியோடோசியஸ் இருவரையும் கைது செய்தார். திருத்தந்தையின் பிரதிநிதி வந்து நடந்த உண்மைகளைக் கூறியதும் புனிதரை பேரரசர் விடுதலைச் செய்தார். கி.பி. 444ஜூன் 27 அன்று நமது புனிதர் இறந்தார். திருத்தந்தை 13ம் சிங்கராயர் 1882ம் ஆண்டு இவரை மறைவல்லுநராக அறிவித்தார். இறைவனின் அன்னையிடம் இந்த திருப்பலி வழியாக திருஅவையையும் இந்த உலகத்தையும் காப்பாற்ற மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. ஆற்றல் நிறைந்த இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், பொதுநிலையினர் என அனைவரையும் ஆசீர்வதித்து, வாழ்வு தரும் வார்த்தையான உம்மோடு இணைந்திருக்கும் வரம் தரவேண்டுமென்றும், திருஅவைக்கு எதிரான தப்பறைக் கொள்கைகளை மிகுந்த ஆற்றலுடன் எதிர்த்து போராட வேண்டிய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. அரவணைக்கும் இறைவா, எம் நாட்டுத் தலைவர்கள் எல்லா மக்களையும் ஜாதி வேற்றுமை பார்க்காமல் அரவணைத்துச் செல்லக்கூடிய பண்பு நலன்களைப் பெற்றவர்களாகத் திகழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. வாழ்வின் வழிகாட்டியே இறைவா, எம் பங்கிலுள்ள இல்லங்களில் நல்லுறவு நீடிக்கவும், உறவுகளை வளர்ப்பதற்கான வழிமுறைகளை நாங்கள் தெரிந்துக்கொண்டு, பின்பற்றவும் எங்களை வழிநடத்தியருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



# பொதுக்காலம் 13வது ஞாயிறு

திருப்பலி
28.06.2026

## முன்னுரை

*திருமதி லதா சுரேஷ்*

I. *2அர. 4: 8-11, 14-16* II. *உரோ. 6: 3-4, 8-11* *மத். 10: 37-42*

இறையேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, நாம் ஒவ்வொருவரும் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அவரது பிள்ளைகள். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தையை எங்கும் கொண்டுச் சென்று அறிவிப்பது நமக்கு கொடுக்கப்பட்ட பணி. அப்பணிக்கு நாம் தகுதிப் பெறும் பொருட்டு அவர் பிள்ளைகளாகிய ஒவ்வொருவரிடமிருந்தும் இறைவன் சில தகதிகளை எதிர்ப்பார்க்கின்றார். இன்றைய முதல் வாசகத்தில் எலிசா இறைவனின் அடியார் என்பதால் தங்கள் இல்லத்தில் தங்கிச் செல்ல அந்த தம்பதியினர் இடம் கொடுக்கின்றனர். அதன் பலனாக பிள்ளை செல்வத்தைப் பெற்று மகிழ்கின்றனர். இறைமக்களே இறைவன் நம்மிடமும் இதையே எதிர்ப்பார்க்கின்றார். எம் மகனே, மகளே, உன் ஆண்டவராகிய தந்தை நான் தங்கிச் செல்ல உன் உள்ளத்தில் இடம் கொடு. நாம் பாவமற்றவர்களாய் வாழும்பொழுதே நம் உள்ளம் இறைவன் தங்கி வாழும் இல்லமாகிறது. நாம் தூய வாழ்வை இறைவன் தங்கி வாழும் இல்லமாகின்றது. நாம் தூய வாழ்வை இழந்து பாவ வாழ்க்கை வாழும் பொழுது இறையன்பை விட்டுவிலகி இறந்தவர்கள் ஆகிறோம். கிறிஸ்துவோடு இணைந்து வாழும்பொழுது அவர் அளிக்கும் நிலைவாழ்வை பெற இயலும். மேலும் அவரது அன்பையும் பரிவிரக்கத்தையும் பெற நாம் உலக ஆசைகளை விடுத்து இறைவன்பால் அன்புக் கொள்ள வேண்டுமென்று இவ்வாசகங்கள் நமக்கு உணர்த்துகின்றது.

மேலும் நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் கைமாறு கிடைக்காமல் போகாது. ஆதனால்தான் நம் முன்னோர்கள் வினைவிதைத்தவன் வினை அறுப்பான், தினை விதைத்தவன் தினை அறுப்பான் என்று பழமொழிக் கூறுகின்றனர். திருவிவிலியத்திலும் மத்தேயு 25:35-46 வரை மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என்றும் தன் சிலுவையை சுமக்காமல் என்னைப் பின்பற்றி வருவோர் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர் என்றார். அவ்வாறு நாம் செய்யும் ஒவ்வொரு உதவியும் இறைவனுக்கே செய்தது என்பதை உணர்ந்தவர்களாய் இறைவன் நமக்கு கொடுத்த கட்டளைகளை ஏற்று அவர் வழிவாழ இத்திருப்பலியில் இணைவோம். இறையாசீர் பெற்று மகிழ்வோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. கருணையின் வடிவே எம் இறைவா, நீர் உண்மையுள்ளவர் நிலையானவர் என்பதை உணர்ந்து உம் பேரொளியில் வாசம் செய்யும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் உம் பேரன்பை எங்கும் பறைச்சாற்ற தேவையான வல்லமையும், ஆற்றலையும் அளித்து நீர் தூயவர் உம்மைப்போன்றே அவர் வாழ்வின் இறுதிவரை உண்மையும், நீதியும், தூய்மையும் கொண்டவராய் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. சமாதானத்தின் காரணரே எம் இறைவா, உலகில் வாழும் ஒவ்வொரு உயிரினமும் இறைவனின் படைப்பு என்பதை உணர்ந்து உலகில் நிலவும் போர், வன்முறை, மற்றும் வெறுப்புகள் நீங்கி அமைதியும் நல்லிணக்கமும் ஒருவர் ஒருவரிடையே மலர அருள்புரியவும், உலகையாளும் தலைவர்கள் தங்கள் புகழுக்காக, பெருமைக்காக வாழாமல் நாட்டின் பொருளாதாரம், கனிமவளங்களை காக்கவும், மக்களின் வாழ்வாதாரம் எவ்வகையிலும் பாதிக்காமல் மக்களின் நலனில் அக்கறைக் கொண்டவர்களாய் விளங்க அருள்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பு இறைவா, உமது பேரன்பை உணராதவர்கள் இறைவன் பெயரால் இந்திய நாடெங்கும் மதவாத சாதியக் கொள்கைகளை தூண்டி மனித நேயத்தை நசுகுகின்றார்கள். இன்றைய சில அரசியல் தலைவர்களும் பிரிவினைவாதத்தை ஆயுதமாக கையில் ஏந்தி, தங்கள் பொறுப்புகளை மறந்து மக்களிடையே சகோதரத்தை அழித்து பகையை உணர்வுகளை விதைக்கின்றனர். இந்நிலை மாறி இந்திய நாடு அன்பின் சங்கமமாக மாற வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. வழிகாட்டும் எம் தெய்வமே, இன்றையப் பிள்ளைகள் சிறுசிறு வேலைகளுக்கூட பிறரை சார்ந்து வாழ்வதால் தங்கள் வாழ்வில் ஏற்படும் துன்ப சிலுவைகளை சுமக்க திராணியற்றவர்களாய் இறைவன்பால்

நம்பிக்கையற்று இறைபயத்தை விடுத்து அப்பிரச்சனையில் இருந்து வெளிவர வழிதெரியாமல் தங்கள் சிலுவை பாரத்தை பிறர்மீது சுமத்துகின்றனர். இல்லையெனில் துவண்டு தற்கொலை, குடிப்பழக்கம், போதைப்பொருள், சாமக்களியாட்டம் போன்ற தீயப்பழக்கங்களுக்கு ஆளாகின்றனர். நீர்தாமே எம்பிள்ளைகளை இறைவழியில் நடத்தி பாதுகாத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



## புனிதர்கள் பேதுரு, பவுல், திருத்தூதர்கள் பெருவிழா

திருப்பலி
29.06.2026

### முன்னுரை

*திருமதி. ராணிசம்பந்தன்*

இறைஇயேசுவில் இனிய சமூகமே, இன்றைய நாளில் திருஅவையின் இரு தூண்களான புனிதர்கள் பேதுரு, பவுல் ஆகியோரின் பெருவிழாவைச் சிறப்பிக்க அழைக்கிறது. மீன்பிடித்துக் கொண்டிருந்த புனித பேதுருவை இயேசு அழைத்து, இனி மனிதர்களைப் பிடிப்பவனாயிரு என்று கூறி தன் சீடராக்கினார். அதன்பின் இயேசுவே மெசியா என்பதை கண்டுணர்ந்து "நீரே மெசியா" என்று உறுதிப்படுத்தியவர், புனித பேதுரு இயேசு பிடிப்பட்டபோது மும்முறை மறுதலித்தவர் என்றாலும் தூய ஆவியாரைப் பெற்றபின் அவரின் உறுதிப்பாட்டைக் கண்டு திருஅவையை அவரிடமே ஒப்படைத்தார் இயேசு.

கிறிஸ்தவர்களை வதைத்த சவுலாக இருந்துபின் இயேசுவின் அழைப்பினால் தமஸ்கு நகரில் பவுலாக அழைக்கப்பட்டவர். இருவருமே திருஅவையின் இரண்டு தூண்களாகக் கருதப்பட்டவர்கள். புனித பேதுரு திருஅவையின் தலைமை ஏற்று வழிநடத்தும் பணியிலும், புனித பவுல் திருஅவையின் நற்செய்திப் பணியை ஏற்று பாலஸ்தீன் பகுதிக்கு வெளியிலும் சுற்றுப் பயணங்கள் மேற்கொண்டு, பிறஇனத்தாருக்கும் போதித்தவர். அதனாலேயே பவுல் 13ம் தூதர் எனவும் பிற இனத்தாரின் திருத்தூதர் என்றும் அழைக்கப்படுகிறார்.

இருவருமே மறைச்சாட்சிகளாக உயிர்துறந்தவர்கள் இருவரும் ஒன்றாக பாழடைந்த சிறையில் அடைக்கப்பட்டவர்கள். புனித பவுல் "சால்வியன்" என்னும் இடத்தில் தலைவெட்டுண்டு இறந்தார். அவ்விடத்தில் பவுல் பேராலயமும், அதில் அவர் கல்லறையும் உள்ளன. புனித பேதுரு கி.பி.64ல் நீரோ மன்னன் காலத்தில் சிலுவையில் தலைகீழாக அறையுண்டு இறந்தார். இவ்விரு புனிதர்களுமே இயேசுவிற்காக, அவரது நற்செய்தியின் பொருட்டு தங்கள் உடல், பொருள், ஆவியைக் கையளித்தவர்கள். திருஅவையின் நிர்வாகப்பணியும், நற்செய்தியின் வளர்ச்சிப் பணியும் சேர்ந்து கிறிஸ்தவ வாழ்வு தழைக்கவும், இயேசுவின் இறையாட்சி அமைதியுடன் செயல்படவும் வேண்டி அதற்காக உழைத்த இத்திருத் தூதர்களை நினைவில் கொண்டு இத்திருப்பலியில் இணைவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. திருஅவையின் நாயகனே இறைவா, புனித பேதுருவின் வழித்தோன்றலான திருத்தந்தை, ஆயர்கள், கர்தினால்கள், குருக்கள், இருபால் துறவியர், திருநிலையினர் அனைவரும் தங்கள் முன்னோடிகளின் இரத்தத் துளிகள் இம்மண்ணில் கலந்து கிறிஸ்தவம் தழைத்தோங்க அயராது உழைக்கவும், இப்புனிதர்களின் தியாக உணர்வை நினைத்து உறுதியுடன் வாழவும் உம்மை மன்றாடுகிறோம்.

2. திருஅவையின் தூணான இறைவா, ஏதும் அறியா பாமரனாகிய புனித பேதுருவையும் எல்லாம் கற்றுத்தேர்ந்த வித்தகனான புனித பவுலையும் ஒன்றிணைத்து திருஅவையின் தூண்களாக நிறுத்தி எல்லோராலும் எல்லாம் முடியும் என்ற கருத்தினை நிலைநிறுத்த, அனைவரையும் சமமாக மதிக்கும் நிலையை எங்களுக்குத் தர உம்மை மன்றாடுகிறோம்.

2. திருஅவையின் இறையாட்சியே இறைவா, நாட்டு மக்களின் நலன் கருதி நல்ல பல தலைவர்கள் தோன்றவும், நல்ல மழையைக் கொடுத்து, விவசாயம் பெருகவும், விவசாயிகள் வாழ்வில் உயரவும், விலைவாசிகள் குறைந்து ஏழை எளிய மக்களின் தேவைகள் நிறைவேறவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



# உரோமைத் திருஅவையின் முதல் மறைசாட்சியர்

திருப்பலி
30.06.2026

## முன்னுரை

*திரு. ஜான் அலெக்ஸ்*

இறையேசுவில் பிரியமுள்ளவர்களே, புனித உரோமை திருஅவையின் முதல் மறைசாட்சியரை இன்று நாம் நினைவு கூறுகிறோம். கி.பி. 64-ல் பேரரசர் நீரோவால் கொடூரமாக மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட தொடக்க கால கிறிஸ்தவர்களே இவர்கள். உரோமையில் ஏற்பட்ட ஒரு பேரழிவுத் தீவிபத்திற்கான பழியைத் திசை திருப்புவதற்காக, நீரோ அவர்களைப் பலிகடாக்களாகப் பயன்படுத்தினார். மனிதத் தீப்பந்தங்களாக எரிக்கப்படுவது போன்ற பயங்கரமான மரணங்களுக்கு அவர்களை உள்ளாக்கினார். ஆண்டவருக்காகத் தங்கள் இன்னுயிரை ஈந்த அந்த மறைசாட்சியர்களை நினைவுகூர்ந்து, அவர்களது வழியில் நாமும் சான்று பகர அருள்பெற இத்திருப்பலியில் செபிப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு


1. திருஅவைக்காக: உரோமைத் திருஅவையின் முதல் மறைசாட்சிகளின் இரத்தத்தால் தூய்மையாக்கப்பட்ட எம் தாயாம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள் மற்றும் குருக்கள், எவ்வித இன்னல்களிலும் உமது

நற்செய்திக்குத் தளராத சாட்சிகளாகத் திகழ அருள்தர வேண்டுமென்று இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

2. துன்புறுவோருக்காக: நீரோ மன்னனின் காலத்தில் கொடூரமான வேதனைகளைச் சகித்த முதல் மறைசாட்சிகளைப் போல, இன்று தங்கள் விசுவாசத்திற்காக அடக்குமுறைகளையும் துன்பங்களையும் சந்திக்கும் அனைத்து மக்களுக்கும், இறைவன் மனத்திடரையும் அமைதியையும் வழங்கிட வேண்டுமென்று இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

3. குடும்பங்களுக்காக: தங்கள் உயிரையும் துச்சமென மதித்து ஆண்டவரிடம் தங்கள் விசுவாசத்தைக் காத்த உத்தமர்களின் முன்மாதிரியை, எங்கள் குடும்பங்கள் பின்பற்றி, அன்றாடச் சோதனைகளில் சோர்வடையாமல் இறையன்பில் நிலைத்திருக்க வரமருள வேண்டுமென்று இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

4. நம் நாட்டிற்காக: நல்வழியில் வாழத் தடையாக இருக்கும் இருள் மற்றும் தவறான வழிகளை விடுத்து, உண்மையின் ஒளியில் நடக்க எம் நாட்டுத் தலைவர்களுக்கும் மக்களுக்கும் நல்லெண்ணத்தை அருள வேண்டுமென்று இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.



பகுதி-2

# நம்பிக்கையில் வளர...



# தூய இதயமும் மாசற்ற இதயமும்

## பொழியும் அன்பு

*திருமதி. டிலைலா சேவியர்*

நமது கத்தோலிக்கத் திருஅவை ஜூன் 16ந்தேதி இயேசுவின் தூய இதயத்தையும், ஜூன் 17ந்தேதி மரியாவின் மாசற்ற இதயத்தையும் சிறப்பித்து மகிழ்கின்றது. கடவுளின் மீட்புத் திட்டத்தில் மரியாவும் இயேசுவும் பிரிக்கப்பட முடியாதவர்களாய் இணைந்து இருக்கின்றனர். ஆகவேதான், இவ்விரு விழாக்களும் அடுத்தடுத்த நாட்களில் கொண்டாடும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்துவின் அன்பு மரியாவின் இதயத்தின் வழியாகவும், கன்னி மரியாவின் அன்பு இயேசுவின் இதயத்தின் வழியாகவும் வெளிப்படுவதால் இருவரின் அன்பும் ஒன்றோடு ஒன்று பிணைந்துள்ளன. "உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக். 1:38) என்ற மரியாவின் வார்த்தைகளில், அவரது இறையன்பும் பிறரன்பும் வெளிப்படுகிறது. தாம் கன்னியாகயிருந்தும், "கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை" (லூக் 1:37) என்ற கபிரியேல் தூதரின் வார்த்தைகளில் நம்பிக்கை வைத்து கடவுளின் மகனுக்குத் தமது கருப்பையில் இடம் கொடுத்ததில் மரியாவின் இறையன்பு வெளிப்படுகிறது.

தம்மையே "ஆண்டவரின் அடிமையாக" (1:38) ஒப்படைத்து, கடவுளின் மீட்புத்திட்டம் மண்ணுலகில் நிறைவேறுவதற்கான வழியை திறந்து வைத்ததில் அவரது பிறரன்பு வெளிப்படுவதைக் காண்கிறோம். மரியாவைப் போன்றே இயேசுவும் இறைத்தந்தையின் திட்டத்துக்கு தம்மை உட்படுத்தி, நமக்கு மீட்பு வழங்கத் துணிந்ததில் அவரது இறையன்பையும் பிறரன்பையும் காட்டுகிறார். "கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டிய ஒன்றாகக் கருதவில்லை" (பிலி 2:6) என்பதில் இயேசுவின் இறையன்பு வெளிப்படுகிறது. "தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார்" (2:7) என்பதில் அவரது பிறரன்பு வெளிப்படுகிறது.

இவ்வாறு, இயேசுவும் மரியாவும் தங்களையே அடிமைகளாக்கி கொண்டதில் நமது மீட்புக்கானத் திட்டம் நிறைவேறியது. முதல் ஆதாமும் ஏவாளும் கீழ்ப்படியாமையால் இழந்த பேரின்ப வாழ்வை நமக்குப் பெற்றுத்தர, புதிய ஆதாமாகிய இயேசுவும் ஏவாளாகிய மரியாவும் தங்களை அடிமையின் நிலைக்கு தாழ்த்திக் கொண்டார்கள். இவ்வாறு கடவுளின் மீட்புத் திட்டத்தில் முழுமையான விதத்தில் தங்களது கீழ்ப்படிதலைக் காட்டி, நமக்கு நிறைவாழ்வைப் பெற்றுத் தந்ததால் அவர்களின் அன்பை நாம் ஒருபோதும் மறக்க முடியாது. ஆண்டவர் இயேசு உலகில் வாழ்ந்த காலத்தில், பசியுற்றோரையும் நோயுற்றோரையும் கண்டு மனமிரங்கினார் என நற்செய்திகளில் காண்கிறோம். "சுமை சுமந்து சோர்ந்திருப்போரே எல்லோரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று கூறிய இயேசு, தம்மை நாடி வந்த அனைவரின் குறைகளையும் போக்கினார். நோய்களால் வருந்தியோருக்கு நலம் வழங்கினார், பசியாய் இருந்தோருக்கு உணவு அளித்தார், பாவத்தின் சுமைகளை மன்னித்தார், இறந்தோரைக் கூட மீண்டும் உயிரோடு எழுப்பினார்.

"ஆண்டவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார், வல்லவராம் கடவுள் தம் தோள் வலிமையைக் காட்டியுள்ளார், உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரை சிதறடித்து வருகிறார், வலியோரை அரியணையில் இருந்து தூக்கி எறிந்துள்ளார், தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார், பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார், செல்வரை வெறும் கையராய் அனுப்பி விடுகிறார்" என்ற கன்னி மரியாவின் மகிழ்ச்சி பாடல் வரிகள், தேவையில் இருப்போருக்கு உதவுகின்ற இயேசுவின் மனநிலையைப் பிரதிபலிக்கின்றன. யாருக்கு இரக்கம் தேவைப்படுகிறதோ அவர்களுக்கு இரக்கமும், யாருக்கு உதவி தேவையோ அவர்களுக்கு உதவியும் கிடைப்பதை உறுதி செய்வதில் இயேசுவும் மரியாவும் உறுதியாக இருந்தனர். மேலும் பணக்காரர்களால் ஏழைகளும், மதவாதிகளால் பாவிகளும், வலியோரால் எளியோரும், ஆட்சியாளர்களால் பாமரரும் ஒடுக்கப்படுவதை அவ்விருவரின் இதயங்களும் விரும்பவில்லை. ஆகவே, பாவிகளுக்கு மன்னிப்பையும், ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வையும் இயேசுவின் மரியாவின் அன்பு உறுதி செய்கிறது. இயேசு தமது இறையாட்சி பணியில், "அலகையின் கொடுமைக்கு உட்பட்டிருந்த அனைவரையும் விடுவித்து எங்கும் நன்மை

செய்து கொண்டே சென்றார்" (திப 10:38). இவ்வாறு அவர் மனிதர்கள் மீது தாம் கொண்டிருந்த அன்பைத் தெளிவாக வெளிப்படுத்தினார்.

அவரது போதனைகளும் புதுமைகளும் இறையன்பை விளக்குவதாகவும் பிறரன்பை மனிதரிடம் விதைப்பதாகவுமே இருந்தன. "உலகில் வாழ்ந்த தமக்குரியோர்மேல் அன்பு கொண்டிருந்த அவர், அவர்கள் மேல் இறுதி வரையும் அன்பு செலுத்தினார்" (யோவா 13:1). மரியாவும் மனிதர்கள் மீது கொண்ட அன்பின் காரணமாகவே, இயேசுவின் இறையாட்சி பணிக்கு முழு ஒத்துழைப்பு வழங்கினார். ஆகவேதான், "உம்மைக் கருத்தாங்கிப் பாலுட்டி வளர்த்த உம் தாய் பேறுபெற்றவர்" (லூக் 11:27) என்று ஒரு பெண் கூறினார். மேலும், ஓர் அன்புள்ள தாயாக, பண்புள்ள சீடராக மரியா இயேசுவைப் பின்தொடர்ந்து சென்றார். "என் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் தாய்" (மத் 12:50) என்ற இயேசுவின் வார்த்தைகள் கன்னி மரியாவுக்குப் பெருமையாக அமைகின்றன. இயேசுவின் வாழ்நாள் முழுவதும் அவரோடு உடனிருந்த மரியா, அவரை சிலுவை வரையிலும் பின்தொடர்ந்தார். மனிதர்கள்மீது கொண்ட அன்பால் இயேசு தமது உயிரை சிலுவையில் கையளிக்க முன்வந்த வேளையில், அதே அன்பால் உந்தப்பட்டு தமது மகனை நமக்காக கையளித்தவர் கன்னி மரியா.

சிலுவையின் அடியில் நின்ற மரியாவிடம், "இவரே உம் மகன்" (யோவா 19:26) என்று புதிய ஆதாமான இயேசு கூறியபோது புதிய ஏவாளான மரியாவிடம் அருள் வாழ்வின் மக்கள் உரு பெற்றனர். இயேசுவின் தூய இதயமும் மரியாவின் மாசற்ற இதயமும் நமது மீட்பில் இன்றளவும் மிகுந்த அக்கறை கொண்டுள்ளன. நாம் கடவுளின் விருப்பத்திற்கு உகந்த அன்பு வாழ்வை வாழ்வதன் வழியாக இவ்விரு இதயங்களின் ஆசையை நிறைவேற்றலாம். இந்த இதயங்கள் நம்மீது பொழிகின்ற அன்பு, நமது தூய வாழ்வுக்கு அழைப்பாக அமைகின்றன. இயேசு மற்றும் மரியாவிடம் நம்மை அர்ப்பணித்து, கடவுளின் அன்பை உணர்வதன் வழியாக நாம் மீட்பின் வாழ்வை உரிமையாக்கிட முடியும். இயேசுவின் தூய இதயமே எங்கள் பேரில் இரக்கமாயிரும் மரியாவின் மாசற்ற இதயமே எங்களுக்காக வேண்டிக் கொள்ளும் ஆமென்.





# இயேசுவின் தூய்மைமிகு இதயம்
## பற்றிய சிறப்பு நிகழ்வுகள்

*திரு. பி. விக்டர்*

நாம் வாழும் இவ்வுலகில் மனிதனின் உடல் வாழவேண்டுமானால், அதாவது நாம் உயிரோடு இருக்க வேண்டுமானால், அது இயேசுவின் இருதயத்தால் இயக்கப்பட வேண்டும். வேறுவிதத்தில் சொல்வதென்றால், நாம் கடவுளின் பிள்ளைகளாக வாழ வேண்டுமானால், விண்ணரசிற்கு உரியவராக மாறவேண்டுமானால், உலக முடிவில் நடக்கவிருக்கும் நமக்கான நீதி தீர்ப்பில் தண்டிக்கப்படாமல் இருக்க வேண்டுமானால், உலகத் தோற்றமுதல் உங்களுக்கென ஆயத்தப்பட்டுள்ள இடத்திற்கு வாருங்கள் என்று விண்ணகத் தந்தையால் வரவேற்கப்பட வேண்டுமானால் நாம் வாழுகின்ற இவ்வுலகில் இயேசுவின் இருதயத்தால் நாம் ஆளப்பட வேண்டும். ஏன் நாம் வாழும் இந்த உலகம், உலகம் என்று நாம் இங்கு குறிப்பிடுவது, உலகிலுள்ள அனைத்தும் இயேசுவின் இருதயத்தின் ஆளுமைகக்குட்பட்டு இருக்க வேண்டும்? அந்த இயேசுவின் இருதயத்தின் சிறப்புகள் என்ன?

இயேசுவின் இருதயம் அன்பினால் பற்றியெரியும் இருதயம். அந்த அன்புக்கு எல்லையில்லை. அது ஆழம், அகலம், நீளம், உயரம் என எல்லைகள் வகையறுக்க முடியாத அன்பு. நமது அறிவுக்கு எட்டாத இந்த அன்பை

அறிந்துக்கொள்ளும் ஆற்றலை நாம் பெற வேண்டும் (எபே. 3:18) என திருவிவிலியம் நமக்குக் கற்பிக்கிறது. பற்றியெரிகிற இந்த அன்பு யாரைப் பற்றிக்கொள்கிறதோ, அவர்கள் இந்த அன்பினால் ஆட்கொள்ளப்படுகிறார்கள். இயேசுவின் ஆளுகைக்கு உள்ளாகிறார்கள். அதுமுதல் அவர்களது வாழ்வு மாறுகிறது. அது தங்களுக்காக வாழ்ந்தவர்கள் தற்பொழுது இயேசுவுக்காக, இந்த சமுதாயத்தில் உள்ள கடவுளின் மக்களுக்காக வாழத் தொடங்குகிறார்கள். இந்த மாற்றம்தான் "கல்கத்தா" நகரில் வாழ்ந்து புனிதையாக மரித்த புனித அன்னை தெரசாளையும் பற்றிக்கொண்டது. முன்பு தான் வாழ்ந்த "கல்கத்தா" நகரில் பிறந்த அனாதைக் குழந்தைகளும், ஆதரவற்ற குழந்தைகளும், ஊனமுற்ற சிறார்களும், நோய்வாய்ப்பட்டு பராமரிப்பின்றி இருந்தவர்களும் இப்பொழுது இயேசுக்களாகத் தெரிந்தார்கள். அதனால்தான் புனித அன்னை அவர்களும் ஓடிஓடி பணிவிடை செய்தார்.

அன்னை இந்த உலகைவிட்டுச் சென்றாலும், அவரது உடன் உழைப்பாளர்கள் சுமார் 45,000பேர், 130 நாடுகளில் இயேசுவின் இருதயத்திலிருந்து வழிந்தோடும் அன்பை அனைவரக்கும் வரிவழங்கி வருகிறார்கள். நமக்காகப் பற்றியெரியும் இயேசுவின் இந்த அன்பு, நாம் நல்லவர்கள் என்பதற்காக அல்ல, மாறாக, நாம் பாவிகளாய் இருந்தபோதே நமக்காக இயேசுவை சிலுவையில் மரிக்கச் செய்தது. நமது பாவங்களுக்காகவும் அக்கிரமங்களுக்காகவும் இயேசுவை மரிக்கச் செய்தது. நமது பாவங்களுக்காகவும் அக்கிரமங்களுக்காகவும் இயேசுவை மரிக்கச் செய்து தமது அன்பு எத்தகையது என்பதை நமக்கு விளங்கச் செய்தார் (உரோ. 5:8). இயேசுவின் இருதயம் அன்பினால் மட்டும் பற்றியெரியவில்லை. அது அவரது இரக்கத்தினால் நிரம்பிவழிகிறது. அதனால்தான் இயேசு, "பலியை அல்ல இரக்கத்தை விரும்புகிறேன்" (மத் 9:13) என்றார். தனது இரக்கத்தை நமக்கு கற்றுக்கொடுக்க விரும்பின இயேசு, "நல்ல சமாரியன்" கதையை மக்களுக்கு எடுத்துரைத்தார். அந்தக் கதையில் தனது இரக்கச் செயலை வெளிப்படுத்திய "நல்ல சமாரியனை" இயேசு பாராட்டுகிறார் (லூக். 10:37), மற்றும் இயேசு நமக்குச் சொன்ன காணாமல் போன "காசு" காணாமல் போன ஆடு, மற்றும் மனந்திருந்திய மைந்தன் கதைகளில் தாம் எவ்வாறு இருக்கமுள்ளவராய் செயல்பட்டார் என்பதை நயம்பட எடுத்துரைத்தார் (லூக்.15). ஏனெனில் இயேசு இரக்கமுள்ளவராய் இழந்து போனவைகளைத் தேடியே வந்துள்ளார் (லூக். 19:10). இயேசுவின் காலத்தில் இரக்கமிகு இறைவனாக இயேசுவில் வெளிப்பட்டவர். அதனாலேயே "மனம்மாறுங்கள்" என்று எல்லோருக்கும் அழைப்பு விடுக்கிறார். விபச்சாரத்தில் பிடிப்பட்ட பெண்ணை தனது இரக்கமிகு இருதயத்தால் மன்னித்து அனுப்புகிறார், தொழுநோயாளரையும் தொட்டு குணப்படுத்தினார். தனக்கென இருந்த ஒரு மகனையும் சாகக் கொடுத்து அடக்கம் செய்யப்புறப்பட்டு வந்த விதவைத் தாயின் கண்ணீரைத் துடைத்தார். இயேசுவின் இருதயத்திலிருந்து வழிந்தோடும் இரக்கத்தின் ஆளுகைக்கு நம்மை உட்படுத்திக்கொண்டு இறைவனின் திருவுளம் நிறைவேறச் செய்து வாழ முயல்வோம்.

இயேசுவின் இருதயத்திலிருந்து பொங்கி வழிகிற மற்றொரு இயல்பு "மன்னிப்பு" ஆகும். இயேசுவின் இருதயம் நமது குற்றங்களை மன்னிக்கிற இருதயமாக நமது பாவங்களை மறக்கிற இருதயமாக அவற்றை மறுபடி நினைவுகூறாத இருதயமாக இருக்கிறது. நம் குற்றங்களை மன்னிக்கிற ஆண்டவர், நமக்கு எதிராக பிறர் நமக்குச் செய்யும் குற்றங்களை நாம் மன்னிக்க வேண்டுமென்று விரும்புகிறார். நாம் எவ்வாறு பிறரை மன்னிக்கவேண்டுமென வினவியபோது, "ஏழு முறையல்ல, எழுபது முறை மன்னிக்க வேண்டுமென்று இயேசு நமக்கு கற்றுத்தந்தார் (மத். 18:22). அதன் உட்பொருள் என்னவென்றால் "அளவில்லாமல்" மன்னிக்க வேண்டும் என்பதுதான். கடவுளுக்கு பலி செலுத்துவதைவிட "மன்னித்தல்" அவசியம் என இயேசு வலியுறுத்துகிறார். நாம் பிறரை மன்னியாதுபோனால் நமது மன்னிக்கப்பட்ட பழைய பாவங்களையும் கடவுள் தோண்டியெடுத்து தண்டனை வழங்குவார். இதைச் சொல்வது எளிது ஆனால் செய்வது கடினம் என நாம் சொல்லலாம். ஆனால் இயேசு சிலுவையில் தொங்கிய வேளையில் "தந்தையே இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாமல் செய்கிறார்கள்" என்று சொல்லி, தாம் போதித்த மன்னிப்பை செய்தும் காட்டினார். இயேசுவின் "திருஇருதயத்திலிருந்து பொங்கிவரும் அன்பையும், இரக்கத்தையும் மன்னிப்பையும் வெளிப்படுத்தி அவர் இருதயத்தால் ஆளுப்படுகிறவர்களாக வாழ்வோம்".

இந்த உலகை ஆளுகிற இயேசுவின் இருதயத்தில் அவரது அன்பு, இரக்கம், மன்னிப்பு இவற்றோடு அவரது மனத்தாழ்மையும் நிரம்பி வழிகிறது. "கடவுள் வடிவில் விளங்கிய இயேசு, கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதாக கருதாமல், தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். அதுமட்டுமல்ல, சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார். இவ்வாறான மனித தாழ்மையில் நிரம்பின இயேசு, என்னிடம் இந்த மனத்தாழ்மையைக் கற்றுக்கொள்ளுங்கள் அப்பொழுது உங்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்கிறார்.

இயேசுவிடம் பணிவு இருந்தது, பெருமை இல்லை, தாழ்மையுள்ளவர்களுக்கு கடவுள் பேரன்பை காட்டுகிறார். இந்த மனத்தாழ்மைதான் அன்னை தெரசாளை பணிசெய்ய வைத்தது. புனித தொன் போஸ்கோவை பணி செய்ய வைத்தது, இன்னும் பலரை பணிசெய்ய வைத்துக்கொண்டிருக்கிறது, இயேசுவின் மனத்தாழ்மையை நமதாக்கிக் கொள்வோம். அவரது திருஇருதயத்தால் ஆளப்படுவதற்கு நம்மை விட்டுக்கொடுப்போம். இந்த உலகை ஆளும் இயேசுவின் இருதயம் அவரது சமாதானத்தினால் பொங்கி வழிகிறது. முனிதரை மீட்பதற்கு இந்த உலகில் பிறந்த இயேசுவின் மீட்பு நிகழ்ச்சியின் காரணம் சமாதானம் நல்லுறவு ஆகும். அவரது பிறப்பு உண்மையானவருக்கு மாட்சியாகவும் உலகில் உள்ள நல்மனதுடையோருக்கு சமாதானம் தருவதாகவும் உள்ளது. இயேசு தருகின்ற சமாதானம் இந்த உலகம் தருகின்ற சமாதானம் போன்றதல்ல. மாறாக இயேசு தன்னுடைய சமாதானத்தை தருகின்றார். அதாவது தனக்கும் விண்ணகத்

தந்தைக்கும் இடையேயான உறவின் நெருக்கத்தை, சமாதானத்தை நமக்கு தருகிறார். இயேசு நற்செய்தி பணிசெய்யத் தனது சீடர்களை அனுப்பியபோது "ஒரு வீட்டிற்குள் நுழைந்தவுடன் இந்த வீட்டிற்கு சமாதானம்" என்று சொல்லச் சொன்னார் (லூக். 10:5) இயேசு உயிர்த்தப்பிறகும் தனது சீடர்களுக்குச் சொன்ன முதல் வாழ்த்தே "உங்களுக்குச் சமாதானம்" என்பதே. இயேசுவின் திருஇருதயத்தால் ஆளப்படுகிற நாம் அவரது அன்பினாலும், இரக்கத்தினாலும், மன்னிப்பினாலும், மனத்தாழ்ச்சியினாலும் அவர் தருகின்ற சமாதானத்தினாலும் நிரம்பி வாழும் நாம், பெற்ற சமாதானத்தை பிறரோடு பகிர்ந்து, கலந்து, ஒன்றுபட்டவர்களாக வாழ முயல்வோம்.





# அருளாளர் பிரான்சிஸ் கெசி

## மற்றும் குழுவின் தியாகம்

*திரு. ஜான் அலெக்ஸ்*

இம்மாதத்தின் சவால் மற்றும் வெற்றிக்கு சொந்தக்காரர்களான புனிதர்கள் என்று சொன்னால், அது அருளாளர் பிரான்சிஸ் கெசி மற்றும் அவரது 4 நண்பர்களை குறிக்கும். இறை நம்பிக்கையை வாழ்வதில் ஒருவருக்கொருவர் எவ்வாறு ஆதரவளித்தார்கள், மாற்றத்தை ஏற்படுத்த எவ்வாறு ஒன்றாக பணி செய்தார்கள் என்பதை பார்க்கின்ற போது நமக்கு வியப்பாக இருக்கும். ஆகவே தான் அவர்கள் கத்தோலிக்க பதின்ம வயதினருக்கு மிக சிறந்த முன்மாதிரியாக இருக்கிறார்கள். சவால் மற்றும் வெற்றியில், குழு அடிப்படையிலான செயல்பாடுகள் மற்றும் நமது நம்பிக்கையைப் பற்றி ஒன்றாக புரிந்துகொள்வது சிறப்பான அம்சங்களில் ஒன்றாகும். கடினமான தருணங்களில் கூட, பிரான்சிஸும் அவரது நண்பர்களும் ஒருவருக்கொருவர் நன்கு புரிந்தவர்களாக இருந்தனர். இரண்டாம் உலகப் போரின் துவக்கத்தில், 1939ல் ஹிட்லர் போலந்து மீது படையெடுத்தார். போஸ்னானில் உள்ள சலேசிய இளைஞர் மன்றம் ஆக்கிரமிக்கப்பட்டு, ஜெர்மானிய வீரர்களின் முகாம்களாக மாற்றப்பட்டது. அங்கு தங்கியிருந்த இளையோர் நகரத்திற்கு வெளியே உள்ள காட்டு பகுதிகளிலும் தோட்டங்களிலும் ஒன்று கூடும் நிலை இருந்து வந்தது.

1940ல் பிரான்சிஸ் கெசி மற்றும் அவரது இளையோர் மன்ற 4 நண்பர்களும் கைது செய்யப்பட்டு சட்டவிரோத மத அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டனர். அவர்கள் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து அவர்கள் பல்வேறு சிறைகளுக்கு மாற்றப்பட்டனர். இருந்த போதிலும் பிரான்சிஸ் மற்றும் அவரது நண்பர்கள் எப்போதும் ஒன்றாகவே இருந்தனர். இது அதிக நாட்கள் நீடிக்க வாய்ப்பில்லாமல் போனது. சிறையில் அவர்கள் தொடர்ந்து செபித்தனர். செபாமலை, சகாய அன்னைக்கு நவநாட்கள், காலை மற்றும் மாலை மன்றாட்டுமாலைகள் என பக்தியோடு நாட்களை கழித்தனர். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் சிறையில் அவர்கள் தங்கள் அறையில் திருவழிபாட்டு விழாக்களையும் கொண்டாடினர். அவர்களது இறை பற்றும் நம்பிக்கையும் என்றும் தளரவில்லை. இறுதிவரை நம்பகமான திருத்தூதுவ வாழ்வின் சாட்களாக இருந்தனர். அவ்வப்போது அவர்கள் ரகசியமாக அனுப்பும் செய்திகள் வழியாக தங்கள் குடும்பத்தினருடன் தொடர்பில் இருக்க முயன்றனர். மீண்டும் போஸ்னானுக்கு அவர்கள் அனுப்பப்பட்டு, தேசத்துரோக வழக்கில் குற்றம்சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டு ஆகஸ்ட் 24ம் நாள் 1942ல் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. ஜுன் 6, 1999ல் அப்போதைய திருத்தந்தை 2ம் ஜான் பால் அவர்களால் திருஅவையில் அருளாளர் நிலைக்கு இந்த ஐந்து சலேசிய மாணவர்கள் உயர்த்தப்பட்டனர்.

இந்த இளையோர் ஒவ்வொருவரும் தங்கள் வாழ்வில் முன்மாதிரி காட்டி கடைபிடித்த பண்புகளை பற்றி கொஞ்சம் பார்ப்போம்....

பிரான்சிஸ் கெசி : 1920ல் பிறந்த இவர், ஆக்கிரமிப்பின் போது அவருக்கு ஒரு தொழிற்சாலையில் வேலை கிடைத்தது. தனது ஓய்வு நேரத்தை சலேசிய இளையோர் மன்றத்தில் செலவிட்டு, அதன் செயல்பாடுகளை வழிநடத்தினார். பிறருக்கு உதவ எப்போதும் தயாராக இருந்தார். தினமும் செபமாலை, திருப்பலியில் நற்கருணை பெறுதல் என இறை பராமரிப்பில் தளரா நம்பிக்கை வைத்திருந்தார். இறக்கும்போது அவருக்கு வயது 22.

எட்வட் க்ளினிக் : 1919ல் பிறந்தவர். பயந்த சுபாவம் ஆனால் இளையோர் மன்றத்திற்கு வந்தவுடன் மிகவும் கலகலப்பானவராக மாறினார். மிகச்சிறந்த பொறுப்பான மாணவரான இவர் இறக்கும்போது வயது 23.

ஜரோக்னிவ் வோஜ்சிச்சோவ்ஸ்கி : 1922ல் பிறந்தவர். சிறந்த தொலைநோக்கு சிந்தனையுள்ளவர். எதையும் எளிதில் புரிந்துகொள்ள முயற்சிப்பதற்காக விஷயங்களைப் பற்றிய ஒட்டுமொத்த பார்வையைப் பெற முயற்சிப்பார். சிறந்த வழிகாட்டியாக தலைவராக இருந்தார். தனக்கே உரித்தான நகைச்சுவை உணர்வுக்காக பெரிதும் போற்றப்பட்டவர். இறக்கும்போது அவருக்கு வயது 20.

செஸ்லாவ் ஜோஸ்வியாக் : 1919ல் பிறந்தவர். சற்று சூடான குணம் கொண்டவரானாலும், தனிப்பட்ட சிந்தனை கொண்டு செயல்படுவார். ஆற்றல்

நிறைந்தவர், எந்த தியாகத்தையும் ஏற்க தயாராக இருப்பவர். நேர்மறையான வாழ்வுமுறையை கொண்டிருந்தவர். "நல்ல குணமும் உள்ளமும் கொண்ட பனித்துளியை போன்ற தூய்மையான ஆன்மாவை கொண்டவர்" என்று அவருடன் பழகியவர்களில் ஒருவர் எழுதியிருந்தார். இறக்கும்போது அவருக்கு வயது 21.



எட்வட் காஸ்மியர்ஸ்கி : 1919ல் பிறந்தவர். தீவிரத்தன்மை, விவேகம் மற்றும் நேர்மைக்காக அறியப்பட்டவர். இளையோர் மன்றத்தில் அவர் தனது இசை திறமையை வளர்த்துக் கொண்டார். நன்கு சிந்திக்கும் ஆற்றலும் வாழ்வில் முதிர்ச்சிப்பெற்ற ஆழமான முடிவுகளை எடுத்துரைப்பவராகவும் திகழ்ந்தார். சிறையில் மூத்த கைதிகள் மீது மிகுந்த அன்பு காட்டினார். தம்மை துன்புறுத்தியவர்கள் மீது எந்த வெறுப்பும் இல்லாமல் விரோதமும் இல்லாமல் அன்போடு ஏற்று மகிழ்ந்தார். இறக்கும்போது அவருக்கு வயது 22.

இறுதியாக : இந்த 5 இளையோர்கள் இறைபற்றிலும் நம்பிக்கையிலும் மற்றும் சலேசிய ஆன்மீக உணர்விலும் வாழ்ந்தவர்கள் என்பதாலேயே அவர்கள் சிறை பிடிக்கப்பட்டனர். செபமாலை, தொன் போஸ்கோ மற்றும் சகாய அன்னை நவநாட்கள் அனுசரிப்பது, நல்ல ஒப்புரவு பெற்று தினமும் நற்கருணை உட்கொண்டு செபிப்பது, பிறருக்காக உழைப்பது, உதவுவது, தேவை ஏற்பட்டால் உயிரையே தியாகம் செய்வது என தங்கள் வாழ்வில் நிரூபித்தவர்கள். அவர்களது இறை பற்று மற்றும் இறை பராமரிப்பின் மீதுள்ள ஆழ்நத நம்பிக்கை ஒருபோதும் தளரவில்லை. அதுவே அவர்களை இறுதிவரை நம்பகமான மறைசாட்சிகளாக உயர்த்தியது என்பது குறிப்பிடத்தக்கது.



# திருஅவைச் செய்திகள்

*திரு. ஜான் அலெக்ஸ்*

## பண்பாட்டு மயமாக்கலில் புதிய தடம் பதிக்கும் மங்கோலியத் திருஅவை

மங்கோலியாவின் மிகச்சிறிய கத்தோலிக்க சமூகம், ஏறத்தாழ 1,400 நம்பிக்கையாளர்களை மட்டுமே கொண்டதாக இருந்தாலும், அது ஒன்றிணைந்த பயணம் (synodality) மற்றும் பண்பாட்டு மயமாக்கல் (inculturation) ஆகியவற்றின் ஒரு ஆய்வுக்கூடமாக மாறிவருகிறது என்று பீதேஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.கர்தினால் ஜார்ஜியோ மாரெங்கோ அவர்களின் வழிகாட்டுதலில், மங்கோலிய மொழி மற்றும் கலாச்சாரத்தை ஆய்வு செய்வதற்காக "ஸ்டுடியம்" என்ற புதிய மையம் திறக்கப்பட்டிருப்பது ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். இந்த மையம் ஆழமான கலாச்சார புரிதலை நோக்கமாகக் கொண்ட ஆராய்ச்சி, மொழிபெயர்ப்பு மற்றும் மறைப்பணியாளர் உருவாக்கத்திற்கு ஆதரவளிக்கும். மங்கோலியாவில் கிறிஸ்தவத்திற்கு வரலாற்று அல்லது கலாச்சார வேர்கள் இல்லை என்பதை விவரித்த அருள்பணியாளர் கோஸ்டா அவர்கள், இதனால் நற்செய்தி அறிவிப்பு என்பது நிறுவப்பட்ட பாரம்பரியங்களைச் சார்ந்திருக்காமல், நம்பிக்கை, உறவுகள் மற்றும் சாட்சியங்களை உருவாக்கும் ஒரு செயல்முறையாக இருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார். மங்கோலிய திருஅவையின் அனுபவம் உலகளாவிய திருஅவைக்கு ஒரு முக்கியமான பாடத்தை வழங்குகிறது என்று கூறிய அருள்பணியாளர் கோஸ்டா அவர்கள், ஒன்றிணைந்த பயணம் என்பது

கட்டமைப்புகள் அல்லது ஆலோசனைகளைப் பற்றியது மட்டுமல்ல, அது பன்முக கலாச்சார மற்றும் மறைப்பணி சூழலில் வாழும் ஒன்றிப்பு, பணி மற்றும் உண்மையான உறவுகளைப் பற்றியது என்று தெரிவித்துள்ளார்.

## ஒற்றுமைக்கும் படைப்பைப் பாதுகாப்பதற்கும் பேராயர் ஜிமெனெஸ் அழைப்பு

சியானியா முழுவதிலும் உள்ள கத்தோலிக்க ஆயர்கள், குவாமில் இடம்பெற்ற ஓசியானியா கத்தோலிக்க ஆயர் பேரவைகளின் கூட்டமைப்பின் நிர்வாகக் குழு கூட்டத்தில் ஒன்றுகூடினர். இந்த கூட்டத்தில் இடப்பெயர்வு, நவீன அடிமைத்தனம், சுற்றுச்சூழல் குறித்த கவலைகள் மற்றும் பசிபிக் பகுதியில் மறைப்பணியின் எதிர்காலம் உள்ளிட்ட முக்கிய பகுதிசார் சவால்களை குறித்து ஆயர்கள் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். அதிக பாதிப்பிற்குள்ளாகும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பாதுகாப்பிற்கு இக்கூட்டத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. கிராமப்புற மற்றும் நகர பகுதிகளில் தற்காலிக புலம்பெயர்ந்த தொழிலாளர்களை பாதிக்கும் நவீன அடிமைத்தன ஆபத்துக்கள் குறித்த நியூ சவுத் வேல்ஸ் விசாரணைக்கு, இந்த கூட்டமைப்பு சமர்ப்பித்த அறிக்கையை ஆயர்கள் ஆய்வு செய்தனர். இடப்பெயர்வால் நாடுகள் எதிர்கொள்ளும் சமூக, ஆன்மீகத் தாக்கங்கள் குறித்து விவாதித்த ஆயர்கள், பொதுநிலையினர், அருள்பணியாளர்கள் மற்றும் ஆயர்களுக்கான சிறந்த பயிற்சித் திட்டங்கள் குறித்தும் ஆராய்ந்தனர்.பரந்த தீவுப் பகுதிகளை இணைப்பதில் டிஜிட்டல் ஊடகங்களின் பங்களிப்பை வலியுறுத்திய ஆயர்கள் உலகமயமாக்கல், சமூக அநீதி மற்றும் சுற்றுச்சூழல் சவால்களுக்கு திருஅவை அளிக்க வேண்டிய தீர்வுகள் குறித்தும் விவாதித்தனர். இக்கூட்டத்தின் இறுதி நாளில் 1,000-க்கும் மேற்பட்ட நம்பிக்கையாளர்கள் பங்கேற்ற கூட்டுத் திருப்பலி நடைபெற்றது. அதில் பேராயர் ஜிமினெஸ் அவர்கள், அனைவரும் ஒற்றுமையுடன் வாழவும், துணிவோடு இறைசாட்சிகளாகத் திகழவும், இயற்கையைப் பேணிக் காக்கவும் அழைப்பு விடுத்தார்.

## எபிரேய கத்தோலிக்கர்களின் 70-வது ஆண்டு விழா

புனித யாக்கோபு மறைவட்டம் பல இஸ்ரேலிய நகரங்களில் யூத மற்றும் யூதரல்லாத கத்தோலிக்கர்கள், புலம்பெயர்ந்தோர், உள்ளூர் கிறிஸ்தவர்கள் மற்றும் ரஷ்ய மொழி பேசும் நம்பிக்கையாளர்களுக்குப் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. எருசலேமின் இலத்தீன் திருஅவையின்கீழ் இயங்கும் புனித யாக்கோபு மறைவட்டம் தனது 70-வது ஆண்டு விழாவை நோட்ரே டேம் மையத்தில் கொண்டாடியது. இதில் ஏறத்தாழ 350 பங்கு மக்களும் விருந்தினர்களும் கலந்து கொண்டனர். திருத்தூதரான புனித யாக்கோபுவின் திருவிழா திருப்பலியை எருசலேமின் இலத்தீன் வழிபாட்டுமுறையின் முதுபெரும் தந்தை கர்தினால் Pierbattista Pizzaballa தலைமை ஏற்று நடத்தினார். இந்த மறைவட்டம் இஸ்ரேலில் உள்ள கத்தோலிக்க

திருஅவையின் ஒரு தனித்துவமான இருப்பைப் பிரதிபலிக்கிறது. இது அகில உலகத் திருஅவையுடன் முழுமையாக ஒன்றிணைந்து செயல்படும் அதே வேளையில், எபிரேய மொழி பேசும் கத்தோலிக்கர்களுக்குப் பணியாற்றி வருகிறது. கடந்த எழுபது ஆண்டுகளாக இந்தச் சமூகத்தைக் கட்டியெழுப்ப உதவிய அருள்பணியாளர்கள், அர்ப்பணிக்கப்பட்ட நபர்கள் மற்றும் பொதுநிலை இறைமக்களுக்கு இந்தக் கொண்டாட்டத்தின் போது நன்றி தெரிவிக்கப்பட்டது. இங்கு 2005 முதல் 2008 வரை மறைவட்ட அதிபராக பணியாற்றிய கர்தினால் Pizzaballa அவர்கள், இஸ்ரேல் மக்களைப் புரிந்து கொள்வதன் அவசியத்தையும், திருஅவை அதன் எதிர்காலத்தை நோக்கிச் செல்ல உதவுவதையும் வலியுறுத்தினார். இன்று, இந்த மறைவட்டம் பல இஸ்ரேலிய நகரங்களில் யூத மற்றும் யூதரல்லாத கத்தோலிக்கர்கள், புலம்பெயர்ந்தோர், உள்ளூர் கிறிஸ்தவர்கள் மற்றும் ரஷ்ய மொழி பேசும் நம்பிக்கையாளர்களுக்குப் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

## கொலம்பியாவின் டியர்ராடென்ட்ரோ பகுதிக்கு வின்சென்டியன் சபை குரு (CM) திருத்தந்தை பதிலாளாக நியமனம்

திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் தற்போது பப்புவா நியூ கினியாவின் கிரிவினா தீவில் உள்ள பதுவை நகர் புனித அந்தோணியார் பங்கு மற்றும் உட்லார்க் தீவில் உள்ள அருளாளர் ஜான் மசுக்கோனி பங்கு ஆகிய பங்குத் தளங்களின் பங்குத்தந்தையாகப் பணியாற்றி வரும் அருள்பணி ஹோமெரோ மரின் அர்போலேடா (CM) என்பவரை, தென்மேற்கு கொலம்பியாவில் உள்ள டியர்ராடென்ட்ரோ பகுதியின் திருத்தூதரக நிர்வாகத்திற்கான திருத்தந்தை பதிலாளாக நியமித்துள்ளார்.

## துபாயில் கிறிஸ்தவ சபைகள் ஒன்றிணைந்து நடத்திய அமைதி வழிபாடு

அமைதி என்பது மனிதர்கள் தங்களுடைய சொந்த உழைப்பால் மட்டுமே எட்டிப்பிடிக்கும் ஒரு இலக்கல்ல. அது இறைவனிடமிருந்து நமக்கு அருளப்படும் ஒரு உன்னதமான வரமாகும் என்றும், அதனை மனித உறவுகளின் மூலம் வரவேற்று வளர்த்து, மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் தெற்கு அரேபியாவின் திருத்தூதுப் பிரதிநிதி ஆயர் பாவ்லோ மார்டினெல்லி அவர்கள் கூறினார். திருஅவைப் பணிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் அரசு அதிகாரிகளுக்கு நன்றி தெரிவித்த ஆயர் மார்டினெல்லி அவர்கள், ஐக்கிய அரபு அமீரகம், வளைகுடா மற்றும் உலக நாடுகள் அனைத்திலும் அமைதி நிலவ அனைவரும் ஒன்றிணைந்து செபிக்க அழைப்பு விடுத்தார். துபாயில் கிறிஸ்தவ ஆலயங்கள் மீண்டும் திறக்கப்பட்டதைக் குறிக்கும் வகையில், ஆர்மீனியன், எத்தியோப்பியன் ஆர்த்தடாக்ஸ், ஆங்கிலிக்கன், கிரேக்க ஆர்த்தடாக்ஸ் மற்றும் காப்டிக் திருஅவை ஆகியவற்றின் பிரதிநிதிகள் உட்பட பல்வேறு வழிபாட்டு முறைகளைச் சேர்ந்த தலைவர்கள் இதில் பங்கேற்ற இந்த நிகழ்வு அமைதிக்கான இறைவேண்டலில் கிறிஸ்தவர்களிடையே நிலவும் ஒற்றுமையை எடுத்துக் காட்டியது.

# சுடர் வாசகர் போட்டி 134

## சரியான விடைகள்

1. சூசையப்பர்
2. புனித அத்தனாசியார்
3. இயேசுவின் மீது நம்பிக்கைக்கொள்வோர்
4. புனித தோமினிக் சாவியோ
5. திருமுழுக்கு என்னும் அருளடையாளம்
6. புனித மரிய மசரெல்லோ
7. புனித அந்தோணியார்
8. தூய ஆவியார் நம்மிடம் வரும்போது
9. புனித லெயனார்து முரியால்தோ
10. புனித முதலாம் யோவான்
11. புனித பிலிப்பு நேரி
12. அருளாளர் ஜோசப் கொவால்ஸ்கி
13. அன்னை மரியா தொன் போஸ்கோவின் கனவில் கூறியது
14. பாக்தாத் கல்தேய திருஅவை
15. திருத்தந்தை லியோ



### குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

Mrs. Santhosa Mary, Coimbatore
Mr. Lourdusamy, Bangalore
Ms. Edwin Mary, Villupuram

# சுடர்
## வாசகர் போட்டி
## 135

1. திருவுடல் திருஇரத்தம் காணிக்கையாகும்போது யாரெல்லாம் உடனிருந்தார்கள்?
2. ஆண்டவர் வலிமை வாய்ந்த வீரரைப்போல் யாரோடு இருப்பதாக உணர்ந்து புகழ்பாக்கள் பாடுகிறார்?
3. தலைவெட்டப்பட்ட புனிதர் யார்?
4. இயேசுவின் திருஇருதயம் என்பதன் பொருள் என்ன?
5. புனித போனிப்பாஸ் காலத்தில் ஆயர் திருச்சங்கம் எந்த ஆண்டுக் கூட்டப்பட்டது?
6. புனித ரோமுவால்ட் ஆப் ரவென்னா என்று எதனால் அழைக்கப்படுகிறார்?
7. அருளாளர் பிரான்சிஸ் கெசியும் அவரது தோழர்களும், யாருடைய ஆட்சியில், எவ்வாறு உயிர் துறந்தனர்?
8. பாத்திமா செய்தியில் ஆண்டவர் இயேசு வெளிப்படையாக தான் விரும்புவதாக எதைக் கேட்டார்?.
9. புனித ஜோசப் கஃபாசோவின் திருவிழா எப்பொழுது கொண்டாடப்பட்டு வருகிறது?
10. புனித பேதுரு யாருடைய காலத்தில் எவ்வாறு இறந்தார்?
11. யாருடைய வருகைக்கான வழியை ஆயத்தப்படுத்தினார் திருமுழுக்கு யோவான்?
12. மனிதத்தீபந்தங்களாக எரிக்கப்பட்டவர்கள் யார்?
13. தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார் என்ற வரிகள் யாருடைய பாடலில் வருகிறது?
14. தனது இரக்கச்செயலை வெளிப்படுத்தியவர் என யாரை இயேசு குறிப்பிடுகிறார்?
15. அருளாளர் பிரான்சிஸ் கெசி மற்றும் அவரது நண்பர்கள் மீது போட்டப்பட்ட குற்றச்சாட்டு என்ன?

### தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

இறைவார்த்தையை தீபகச் சுடர் மின்னிதழ் வழியாக அனைவருக்கும் எடுத்துரைக்கும் பணியில் எங்களோடு இணைந்து பயணிப்பதற்கு நன்றி. இந்த மின்னிதழை நீங்கள் வாட்சப் மூலம் இலவசமாகப் பெற்று பிறருக்கும் பகிரலாம். இந்த பணிக்கு தன்னார்வ தொண்டர்கள் தங்கள் திறமை, நேரத்தை வழங்கி உதவலாம். முடிந்தவர்கள் நன்கொடையாகவும் தந்து இப்பணியை தாங்கலாம்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
கைப்பேசி எண் : 9385201453

# அடுத்த சுடரில்

பகுதி-1

## வழிபாட்டு வழிக்காட்டி

புனித தோமா இந்தியாவின் திருத்தூதர் பெருவிழா
போர்த்துக்கல் நாட்டு புனித எலிசபெத்
பொதுக்காலத்தின் 14ம் ஞாயிறு
புனித மரிய கொரற்றி
புனித அகுஸ்தின் சவோ ரோங்
புனித பெனடிக்ட்
பொதுக்காலத்தின் 15ம் ஞாயிறு
புனித ஹென்றி
புனித பொனவெந்தூர் ஆயர்
கார்மேல் மலை புனித கன்னி மரியா
பொதுக்காலத்தின் 16ம் ஞாயிறு
புனித மகதலா மரியா விழா
புனித பிரிட்ஜித்
புனித ஷார்பல் மாக்லூப்
புனித யாக்கோபு திருத்தூதர் விழா
பொதுக்காலத்தின் 17ம் ஞாயிறு
புனித அல்போன்சா முட்டாத்துப்படத்து கன்னி
புனிதர்கள் மார்த்தா, மரியா, லாசர்
லொயோலா நகர்ப் புனித இஞ்ஞாசியார்

பகுதி-2

## நம்பிக்கையில் வளர...

சென்னை சலேசிய சபையும் புனித தோமாவும்
மரியாளின் வாழ்வில் தூய சுவக்கின் அன்னம்மாள்
புனித இஞ்ஞாசியார் - வாழ்வு தரும் பாடம்
திருஅவையின் செய்திகள்

# ஜூன் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 01 | தி | புனித ஜஸ்டின் மறைச்சாட்சி திருப்பலி | 2பேதுரு 1: 1-7 | மாற்கு 12: 1-12 |
| 02 | செ | புனிதர்கள் மார்சலீனஸ், பீட்டர் மறைச்சாட்சியர் | 2பேதுரு 3: 12-15, 17-18 | மாற்கு 12: 13-17 |
| 03 | பு | புனிதர்கள் சார்லஸ் லுவாங்காவும் தோழர்களும் | 2திமொ. 1: 1-3, 6-12 | மாற்கு 12: 18-27 |
| 04 | வி | | 2திமொ. 2: 8-15 | மாற்கு 12: 28-34 |
| 05 | வெ | | | யோவா. 20: 1-9 |
| 06 | ச | புனித நார்பெர்ட் ஆயர் | 2திமொ. 4: 1-8 | மாற்கு 12: 38-44 |
| **07** | **ஞா** | **கிறிஸ்துவின் தூய்மைமிகு திருவுடல், திருஇரத்தம் பெருவிழா** | **I. இச. 8: 2-3, 14-16**<br>**II. 1கொரி. 10: 16-17** | **யோவா. 6: 51-58** |
| 08 | தி | புனித மரியம் தெரசியா | 1அர. 17: 1-6 | மத். 5: 1-12 |
| 09 | செ | புனித எப்ரம் திருத்தொண்டர் மறைவல்லுநர் | 1அர. 17: 7-16 | மத். 5: 13-16 |
| 10 | பு | | 1அர. 18: 20-39 | மத். 5: 17-19 |
| 11 | வி | புனித பர்னபா திருத்தூதர் | 1அர. 18: 41-46 | மத். 5: 20-26 |
| **12** | **வெ** | **இயேசுவின் தூய்மைமிகு இதயம் பெருவிழா** | **I. இச. 7: 6-11**<br>**II. 1யோவா. 4: 7-16** | **மத். 11: 25-30** |
| 13 | ச | **புனித கன்னிமரியாவின் மாசற்ற இதயம் நினைவு** | 1அர. 19: 19-21 | மத். 5: 33-37 |
| **14** | **ஞா** | **பொதுக்காலத்தின் 11ம் ஞாயிறு** | **I. விப. 19: 2-6**<br>**II. உரோ. 5: 6-11** | **மத். 9: 36-10: 8** |
| 15 | தி | | 1அர. 21: 1-16 | மத். 5: 38-42 |
| 16 | செ | | 1அர. 21: 17-29 | மத். 5: 43-48 |
| 17 | பு | | 2அர. 2: 1,6-14 | மத். 6: 6.16-18 |
| 18 | வி | | சீஞா. 48: 1-5 | மத். 6: 7-15 |
| 19 | வெ | **புனித ரோமுவால்டு, துறவு மடத்துத் தலைவர்** | 2அர. 11: 1-4, 9-18, 20 | மத். 6: 19-23 |
| 20 | ச | | 2குறி. 24: 17-25 | மத். 6: 24-34 |
| **21** | **ஞா** | **பொதுக்காலத்தின் 12ம் ஞாயிறு** | **I. எரே. 20: 10-13**<br>**II. உரோ. 5:12-15** | **மத். 10: 26-33** |
| 22 | தி | நோலா நகர்ப் புனித பவுலினுஸ் ஆயர், புனிதர்கள் ஜான் பிஷர் ஆயர், தாமஸ் மூர் | 2அர. 17: 5-8, 13-15, 18 | மத். 7: 1-5 |
| 23 | செ | | 2அர. 19: 9-11,14-21, 31-35,26 | மத். 7: 6, 12-14 |
| 24 | பு | புனிதத் திருமுழுக்கு யோவானின் பிறப்பு பெருவிழா | I. எசா. 49: 1-6<br>II. திப. 13: 22-26 | லூக். 1: 57-66, 80 |
| 25 | வி | | 2அர. 24: 8-17 | மத். 7: 21-29 |
| 26 | வெ | | 2அர. 25: 1-12 | மத். 8: 1-4 |
| 27 | ச | அலெக்சாந்திரியா நகர்ப் புனித சிரில், ஆயர் | புல. 2: 2,10-14, 18-19 | மத். 8: 5-17 |
| **28** | **ஞா** | **பொதுக்காலத்தின் 13ம் ஞாயிறு** | **I. 2அர. 4: 8-11, 14-16**<br>**II. உரோ. 6: 3-4, 8-11** | **மத். 10: 37-42** |
| 29 | தி | புனிதர்கள் பேதுரு, பவுல்: திருத்தூதர்கள் பெருவிழா | I. திப. 12: 1-11<br>II. 2திமொ. 4: 6-8, 4: 11-12 | மத். 16: 13-19 |
| 30 | செ | உரோமைத் திருஅவையின் முதல் மறைச்சாட்சியர் | ஆமோ. 3: 1-8,4: 11-12 | மத். 16: 13-19 |

# வாசகர்கள் கவனத்திற்கு




மாதந்தோறும் அச்சிடப்பட்டு உங்கள் கைகளில்
தவழ்ந்த தீபகச் சுடர் மாத இதழ்
தவிர்க்க முடியாத பொருளாதார காரணங்களால்
இணையதளத்தில் இ-புத்தகமாக மட்டுமே
வெளியிடப்பட்டு வருகிறது.
எனவே இந்த மாத இதழ் வழி இறைப்பணிக்கு
நீங்கள் ஏதாவது விதத்தில் நன்கொடை
அளிக்க விரும்பினால் தயவு செய்து QR Code
ஸ்கேன் செய்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

## சிறார்களின் திருவிருந்துக்கான மறைக்கல்வி

Catechism for First Holy Communion




**இப்போது விற்பனையில்**




## சிறார்களின் உறுதிப்பூசுதலுக்கான மறைக்கல்வி

Catechism for Sacrament of Confirmation

+91 9385201453 deepagamdonbosco

# தீபகம் – தொன் போஸ்கோ

## நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம்

நடத்தும்

## ஞாயிறு மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான

# ஒருநாள் பயிலரங்கம்

விரைவில்...



**அனைவரும் வருக! பலன் பெருக!!**

மேலும் விபரங்களுக்கு :

+91 9385201453

தயாரிப்பு : **DEEPACT** (Deepagam Proclamation And Cultural Team)

கணினியேற்றம் : **கபிரியேல் மேரி**   வடிவமைப்பு : **ஜான் அலெக்சாண்டர்** - DEEPACT

தயாரிப்பில் மேற்பார்வை : **ஈசாக், மரிய சந்தோஷ், மரிய ஜேம்ஸ்**